விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது
Valampurii
சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 28 ஞாயிற்றுக்கிழமை (11.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 113

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

# தமிழ் மக்கள் எல்லோர் மீதும் நம்பிக்கை இழந்து விட்டனர்

## யதார்த்தத்தைக் கூறுகின்றார் சுரேஸ் பிரேமச்சந்திரன்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் எல்லோர் மீதும் நம்பிக்கையயிழந்துள்ளனர். அவர்கள் யாரையும் நம்பத் தயாரில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை, நாவலப்பிட்டியவில் 20-ம் திகதி மறுவாக்குப் பதிவு

(கொழும்பு)

திருகோணமலை மற்றும் நாவலப்பிட்டித் தேர்தல் தொகுதிகளில் எதிர்வரும் 20 ஆம் திகதி மறு வாக்குப் பதிவு இடம்பெறவுள்ளதாகத் தேர்தல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, திருகோணமலை மற்றும் நாவலப்பிட்டிய ஆகிய பிரதேசங்களில் எதிர்வரும் 20 ஆம் திகதி மறுவாக்குப் பதிவுகள் நடைபெறவுள்ளன.

வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டது, வாக்களிப்பு நிலைய அதிகாரி மிரட்டப்பட்டது ஆகிய சம்பவங்களைத் தொடர்ந்து நாவலப்பிட்டியப் பகுதிக்கான வாக்குகள் எண்ணும் பணிகள் இடைநிறுத்தப் (20 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜினாமாவுக்கு இடமில்லை

### ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து தாம் பதவி விலகப் போவதில்லை என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் தோல்வி என்பது தேர்தல் தொகுதி அமைப்பு முறையில் உள்ள குறைபாடு ஒன்றே தவிர தலைமைத்துவத்தில் உள்ள நம்பிக்கைக் குறைவு அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தெரிவாகியிருக்கும் மங்கள சமரவீரவும் இங்கு உரையாற்றினார். (ந-5)

## முக்கிய அமைச்சர்கள் பலர் அதிர்ச்சித் தோல்வி



(கொழும்பு)

ஆறாவது நாடாளுமன்றத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களாக அங்கம் வகித்த பலர் ஏழாவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படாது இப் பொதுத் தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர்.

ஆறாவது நாடாளுமன்றத்தின் அமைச்சரவையில் வெளிவிவகார அமைச்சராக அங்கம் வகித்த றோகித போகொல்லாகம, விளையாட்டுத்துறை அமைச்சர் காமினி லொக்குகே, நீதியமைச்சர் மிலிந்த மொறகொட, வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் பேரியல் அஷ்ரப், பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் நஜீப் ஏ.மஜீத்,

அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் அமீர் அலி, பிரதி அமைச்சர்களான வடிவேல் சுரேஸ், புத்திரசிகாமணி உள்ளிட்டோர் தேர்தலில் மக்களால் (20 ஆம் பக்கம் பார்க்க)

## தேசியப் பட்டியல் எம்.பியாக சுமந்திரன் நியமனம் பெறுவார்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தேசியப் பட்டியல் மூலம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கிடைக்கக் கூடிய வாய்ப்பு உள்ளதாகக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அவ்வாறு கிடைக்குமிடத்து அந்த இடத்துக்கு பிரபல சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நியமிக்கப்படுவார் என்று கூட்டமைப்புத் தலைமைப்பீடம் உறுதி செய்துள்ளது.

நடந்த பொதுத்தேர்தலில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் திருகோணமலை மாவட்டம் தவிர்ந்த (20 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டும்

### அரசுக்கு அமெரிக்கா ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற தேர்தலில் தற்போதைய அரசு வெற்றியீட்டியுள்ளது. இந்த வெற்றியைப் பயன்படுத்திப் புதிய அரசு மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முற்பட வேண்டும் என அமெரிக்கா விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் தற்போதைய அரசு வெற்றியீட்டியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் பரப்புரைகளில் மனித உரிமைகளை நடைமுறைப் (20 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையின் முதற் தர
SINGER தொலைக்காட்சிகள்
தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக
www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி
விசேட விலைக்கழிவு
திருப்தி இன்றேல் பணத்தினை மீளப்பெறும் வாய்ப்பு

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி

SINGER Plus
MORE BRANDS-MORE CHOICE
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்
(C-4172)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சுதந்திரத்திற்கு பின்பான தேர்தல்களில் மிகக்குறைந்த வாக்களிப்பு இம்முறையே

## பிரித்தானிய த ரைம்ஸ் தகவல்

(கொழும்பு)

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலே குறைந்தளவிலான மக்கள் வாக்களித்த தேர்தல் என பிரித்தானியாவில் இருந்துவெளிவரும்தரைம்ஸ்நாளேடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை அரசு நடந்து முடிந்த தேர்தலில் பெரும் வெற்றி பெற்றுள்ளது. எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு வரையிலும் ஆட்சி புரியும் அதிகாரத்தை அது பெற்றுள்ள போதும்,

குறைந் தளவான மக்களே தேர்தலில் வாக்க ளித்துள்ளனர்.

லண்டன் சிற்றி பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷவும் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு 120 ஆசனங்களை பெற்றுள்ளது.

விடுத லைப் புலிகள் முறியடிக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தல் இதுவாகும்.

தேர்தலின் இறுதிமுடிபு அறிவிக்கப்பட்ட போது அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறவில்லை.

இரண்டாவது தவணையுடன் நிறைவுபெறும் ஜனாதி பதிபதவியை இரண்டுதடவைகளுக்கு மேல் மாற்றியமைக்க அரசுக்கு இந்த பெரும்பான்மை அவசியம்.

எனினும் சுயேட்சையாகவும் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டவர்களை அமைச்சர் பதவிகளை வழங்கி அரசு தனது பக்கம் இழுத்துக் கொள்ளலாம்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எட்டுவதற்கு எமக்கு 12 அல்லது 13 ஆசனங்கள் தேவை. ஆனால் அதனை பெறுவது ஒன்றும் கடினமானது அல்ல என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அதிகாரம் ஒரு குடும்பத்திற்குள் சிக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. ஜனாதிபதியின் குடும்பத்தை சேர்ந்த டசின் கணக்கான உறுப்பினர்கள் அரசின் அமைச்சர்களாகவும், அதிகாரிகளாகவும் உள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தேர் தலில் எவ்வளவு மக்கள் வாக்களித்துள்ளனர் என்பது தொடர்பில் தேர்தல் திணைக்களம் எதுவும் தெரிவிக்கவில்லை.

ஆனால் 50 தொடக்கம் 55 விகிதமாக அது இருக்கும் என தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் மிகக்குறைந்த அளவில் மக்கள் வாக்களித்த தேர்தல் இதுவாகும் என அது மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)


## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றேன்



எங்களின் ஒரே ஒரு அமைச்சராகிய உயர் திரு. மாண்பு மிகு மதிப்புக்குரிய *அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா* அவர்களின் சேவைக்கு லாலா சோப் ஸ்தாபனத்தாரின் மனம் நிறைந்த எனது அன்பு கொண்ட பாராட்டுக்கள்.

தேர்தலில் அதிக எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றவரும் ஏழைஎளிய மக்கள் என்று பாராது இதய சுத்தியோடும் இன்முக சிரிப்போடும் எல்லோரும் தனது அன்புக்குரிய மக்கள் என்று நினைத்து உதவிக்கரம் நீட்டுபவருக்கு என்னாலான தனிமை கொண்ட நன்றிக் கடனுக்கான அன்பான பாராட்டுக்கள்.

*லாலா சோப் தொழிற்சாலை*
அச்சுவேலி.

(சி-029)

## மரண அறிவித்தல்

### கந்தையா நாகரத்தினம்



சங்கானை தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகரத்தினம் 08.04.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னப்பிள்ளை தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் செல்லப்பா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கனகம்மா, மனோண்மணி ஆகியோரின் மைத்துனியும், சீவரத்தினம், சண்முகராஜா, விக்னேஸ்வரன், கமலநாதன், கமலேஸ்வரி (பிரான்ஸ்), ஞானேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேஸ்வரி, ஞானேஸ்வரி, அன்னரத்தினம், சகுந்தலாதேவி, பூபாலேந்திரன் (பிரான்ஸ்), சிவயோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

சஞ்ஜீவன், தமிழினி, காலஞ்சென்ற ரதீசன் (பிரான்ஸ்), ரஜீவன், சிவசெந்தூரன், சிவப்பிரியா, சிவநித்தியா (லண்டன்), சிந்துஜா (கனடா), அனுசா, சயந்தினி, சியாமினி, கௌசியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்,

சஸ்வினி (லண்டன்), ஹருணி, சாம்பவி, வித்தகன் (கனடா), அஸ்வியா, ஸ்ரெபனி, மாக்ஸ்ஸிம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொட்டிலடி,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.

(1153)

## சேவை முகவர்

விற்பனைக்கு

கந்தர்மடம், கோண்டாவில், உரும்பிராய் பலாலி வீதி, 150 மீற்றர் தூரம் 9 பரப்பு பொற்பதி வீதி, நல் லூர் ஆகிய இடங்களில், காணிகள், வீடு விற்பனைக்குண்டு. விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு : சுந்தரம்
222 9177, 071 462 4830

(1167)

## Sukevi English Language and Fitness Centre

"English and fitness programmes for better future"

- IELTS
- Spoken English
- Literature / O/L & A/L
- Kids English Language Programmes
- Herbal Oil Therapy
- Fitness programmes for men &women
- Yoga Trainig and Therapy

Guidance and Training provided by skilled Professionals.

Application forms are available at:-
No.295, Kalatty Junction ,
Brown Road ,
Jaffna.

(1166)

**Courses commence on 17-04-2010**

Contact: 0213207433 Hotline : 0773452130

## நியூ கேம்பிறிச்

அளவெட்டி

புதிய பிரிவுகள்

O/L Day — வாரத்தில் 5 நாட்களும்

A/L 2012 — ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.

எமது வழமையான ஆசிரியர் குழாமுடன் ஆரம்பம்– 15.04.2010 காலை 7.00 சுபவேளையில்

(1158)

## ஐங்கரன் திருமண சேவை

மணமகள் தேவை

எங்களிடம் யாழ். இந்து உயர்குலம் U.K Citizen 29 வயது (அத்தம்), 31 வயது (பரணி), 35 வயது (திருவாதிரை), 39 வயது (ரோகினி) , Canada Citizen 35 வயது (R.C), 37 வயது ( ரேவதி) , America Citizen 34 வயது (மகம்) , Austerliya Citizen 34 வயது (B.Com, அச்சுவினி) , Swiss Citizen 33 வயது (கார்த்திகை) ஆகிய மணமகன்மார் உள்ளனர். தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை.

*தொடர்பு :- லண்டன் ஐங்கரன்*

T.P No. 0044 7535384166
0044 7508295863

Fax No: 0044 2086720673
wwwayngaranwedding@yahoo.com

(C-021)

## மணப்பெண் தேவை

யாழ். இந்து உயர்குலம் U.K Citizen 1970ஆம் ஆண்டு பிறந்தவர். திருவோண நட்சத்திரம் உடையவர். அரசாங்கத் துறையில் கடமையாற்றுகின்றார். மிக விரைவில் கொழும்பு வரவுள்ளார். படித்த தகுந்த மணப்பெண்ணை எதிர்பார்க்கின்றார்.

தொடர்பு:
00447404120188

(அ-020)

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் எமது ஸ்தாபனங்களிற்கு பின்வரும் வெற்றிடங் களிற்கு பணியாளர்கள் தேவை.

01. விற்பனையாளர் (Salesman)
02. விநியோக பையன்கள் (Delivery Boys)
03. எழுதுவினைஞர் (Cleark-பெண்கள்)

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிபரக்கோவையை கீழ்க் காணும் முகவரிக்கு எதிர்வரும் 20.04.2010 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**சுப்பசூஸ்**

முகவரி: 434, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(1164)

## மாபெரும் மலிவு விற்பனை

பெண்கள், சிறுவர்களுக்கான தரமான ஆடைகள் மலிவான விலையில்!

ரூபா 50லிருந்து 300 வரை இன்றே நாடுங்கள்!



**84,Brown Road, நீராவியடி**

**யாழ்ப்பாணம்**

(நீராவியடி பிள்ளையார் கோயில் முன்பாக)



(சி-016)

## தேவை

ஆண், பெண் விற்பனையாளர் தேவை.

புதுவருடத்தை முன்னிட்டு எம்மிடம் 5 DVD களை வாங்குவோருக்கு 1 DVD இலவசம்.

**நிரு சீடி பிளாஸா**

சித்தன்கேணி சந்தி

(1181)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப.2 மணிக்கு காரைநகர் மருதடி ஸ்ரீவீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் பன்னிரு திரு முறை முற்றோதல் நிகழ்வை நடத்தவுள்ளது.

இந்நிகழ்வின் நிறைவு வைபவத்தில் திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய மேக ராக்குறிஞ்சிப் பண்ணில் அமைந்த நீலாம்பரி ராகத் திருப்பதிகங்கள் எனும் நூலை கந்தையாப்பிள்ளை சிவபாலன் வெளியிட்டு வைக்கவுள்ளார். (6)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் இளந் தொண்டர் சபை சிறுவர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு சிறுவர் முன் பள்ளி முன்றலில் நடைபெறவுள்ளது.

இளந் தொண்டர்சபை செயலாளர் யோ. சுதந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். தேசியக் கல்வியியல் கல்லூரியின் உபபீடாதிபதி பா. தனபாலன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக கோண்டாவில் மகா வித்தியாலய உப அதிபர் இ. அருணகிரிவாசன் கலந்து கொள்ளவுள்ளார். (6)

## யாழ். போதனா வைத்தியசாலையில்

# நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் 15 ஆம் திகதி முதல் மாற்றியமைக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் பொதுமக்கள், நோயாளர்களின் உறவினர்கள், நோயாளர்களுக்கு உணவு வழங்க வருபவர்கள் நோயாளர்களைப் பார்வையிடும் நேரங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் பின்வருமாறு மாற்றியமைக்கப்படவுள்ளது.

காலை - மு.ப 06.00 - மு.ப 06.30, மதியம் - பி.ப. 12.00 - பி.ப 01.00, மாலை- பி.ப 04.30 - பி.ப 05.30.

பார்வையாளர் நேரம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பது நோயாளர்களுக்கு ஓய்வு வழங்கவும், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் இடையூறின்றி தமது மருத்துவ சேவையை நோயாளர்களுக்கு வழங்குவதற்காகவும் ஆகும்.

தேவைக்கு அதிகமான பார்வையாளர்களின் வருகை வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்வதற்குப் பாதிப்பதாக அமைவதால் உறவினர்கள் மட்டுப்படுத்திய அளவில் வந்து நோயாளரை குறித்த நேரத்தில் பார்வையிட்டு செல்வது வரவேற்கத் தக்கதாகும்.

ஆகவே பார்வையாளர்கள் முடிந்தவரை குறித்தொதுக்கப்பட்ட நேரத்தினுள் வருகை தந்து நோயாளர்களாகிய உங்கள் உறவினர்களுக்குநாம்சிறந்தசேவையாற்றஒத்துழைப்பை வழங்குமாறு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (6)

# சங்காபிஷேக விழா

சிததன்கேணி அருள்மிகு நாக கன்னியம்பாள் ஆலய வருடாந்த பங்குனித்திங்கள் அஷ்டோத்திர (108) சங்காபிஷேக விழா நாளை திங்கட்கிழமை நண்பகல் 12.06 மணிமுதல் 1.36 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து *அம்பிகையின் திருவருளும் குருவருளும்* எனும் தலைப்பில் சைவப்புலவர் க. நித்தியதசீதரன், *அருள்வழங்கும் நாயகி* எனும் தலைப்பில் செ. கந்தசத்தியதாசனும் சொற்பொழிவாற்றவுள்ளார். (6)

# பயிற்சிப் பட்டறை

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச பாடசாலைகளில் தரம் 1 மாணவர்களுக்கு ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

# மஹோற்சவம்

அருள்மிகு சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்தமாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தில் 22 ஆம் திகதி வியாழக்கிழமை தெப்பத்திருவிழாவும், 23 ஆம் திகதி கயிலாய வாகனத் திருவிழாவும், 28 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் மு.ப. 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (6)

# தேர்தல் கால கொடுப்பனவு

கடந்த ஜனாதிபதி தேர்தலில் கடமையாற்றிய தென்மராட்சி பிரதேச ஆசிரியர்களுக்குரிய கொடுப்பனவு பட்டியல் நாளை திங்கட்கிழமை சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளது. எனவே அதிபர்கள் அவற்றைப் பெற்று ஆசிரியர்களுக்கு விநியோகிக்கும்படி கல்விப்பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

# இராசி பலன்

11-04-2010
(பங்குனி 28, ஞாயிற்றுக்கிழமை)
துவாதசி பிற்பகல் 2.42 மணிவரை
சதயம் முற்பகல் 11.56 மணிவரை
இராகுகாலம் 4.36-6.06 மணிவரை
சுபநேரம் 9.06-10.36 மணிவரை
புங்குடுதீவு மடத்துவெளி பாலசுந்தர மணியர் தேர்

| | |
|---|---|
| மேடம் | பொருள் சேர்க்கை, கலந்துரையாடல், எடுத்த காரியம் கைகூடும், கீர்த்தி. |
| இடபம் | பெரியோர் சந்திப்பு, அதிகாரம், தடைப்பட்ட காரியம் கைகூடும், போசன சுகம். |
| மிதுனம் | கட்டுப்பாடு, புதிய திருப்பம், தெய்வ சிந்தை, உறவினர் சந்திப்பு. |
| கடகம் | அபகீர்த்தி, காரிய தாமதம், பணக் குறைவு, ஆரோக்கியக் குறைவு. |
| சிங்கம் | திடீர் பயணம், காரிய அனுகூலம், போசன சுகம், நல்ல வரவேற்பு. |
| கன்னி | பணவருவாய், உற்சாகம், பிரயாணம், காரிய நன்மை. |
| துலாம் | காரிய இடையூறு, மனச்சஞ்சலம், பணவிரயம், தொழில் சிந்தை. |
| விருச்சிகம் | பயந்த சுபாவம், புதிய தகவல், முயற்சி தாமதம், சுபசெலவு. |
| தனுசு | கூட்டு முயற்சி, நல்ல செய்தி, இனிய சம்பவம், போசன சுகம். |
| மகரம் | சௌரவக்குறைவு, சகோதரர் உதவி, தொழில் சிந்தை, தனவிரயம். |
| கும்பம் | நண்பர்கள் சந்திப்பு, புதிய முயற்சி, தெய்வ சிந்தை, சுபசெலவு. |
| மீனம் | உணர்ச்சி வசப்படல், சுபசெலவு, நண்பர்கள் சந்திப்பு, ஆரோக்கியக் குறைவு. |

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## வெப்பமும் வெளிச்சமும்

“என்னங்க இது... இப்படி நேரம் காலம் தெரியாம கரண்ட் நின்றுபோச்சு”

“அதற்குப் பெயர்தான் மின்சாரம். கொஞ்சம் பொறு கரண்ட் வந்துவிடும்.”

“கொஞ்சநேரம் இப்படி ஆனாலே நம்மால் பொறுத்துக் கொள்ள முடியவில்லையே... வாழ்நாள் முழுவதும் பார்வை இல்லாமல் சிலபேர் இருக்கிறார்களே. அவர்களுக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும்?”

“வெளிச்சத்தில் இருந்து இருட்டுக்கு வந்தால் தான் கஷ்டம். இருட்டிலேயே இருந்து விட்டால் அது வேற உலகம்.”

“அதோ பாருங்க. ஒரு மின்மினிப் பூச்சி! அதற்கு எப்படி வெளிச்சம் வருகிறது?”

“அதற்குக் காரணம் லூசிஃபெரின் என்ற பொருள். அந்த வெளிச்சத்தில் வெப்பம் கிடையாது. இந்த ஒளியின் இரகசியம் இன்னும் மனிதனுக்கு புலப்படவில்லை. அதனால் நம்மால் அந்தப் பொருளை உருவாக்க முடியவில்லை. ஆண் பூச்சி பெண்பூச்சியைக் கவர்வதற்காகத் தான் இந்த ஒளியை உண்டாக்குகிறது. இப்ப கூட... கொஞ்சம் பூச்சிகளை பிடித்து ஒரு போத்தலுக்குள் போட்டுவிட்டால் அந்த வெளிச்சத்தில்... ஒரு புத்தகத்தையே படித்துவிடலாம்.”

“அதற்கு அவசியமில்லைங்க. இதோ ‘கரண்ட்’ வந்துவிட்டது. அதோட வாசலில் பிச்சைக்காரனும் வந்துவிட்டான்.”

“அம்மா! தாயே! மகாலட்சுமி! இரண்டு கண்ணும் இல்லாதவன் தாயே! பிச்சை போடுங்க”

“அவனுக்கு ஏதாவது கொண்டுவந்து போடு. உண்மையிலேயே கண்பார்வை இல்லாதவன் போலிருக்கிறது”

“அது எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்றீங்க?”

“உன்னைப் போய் மகாலட்சுமி என்கிறானே...”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 50 |
| பச்சைமிளகாய் | 90 | 100 | 60 |
| தக்காளி | 50 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 40 | 50 | 40 |
| கரட் | 100 | 120 | 90 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 160 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 50 | 100 | 70 |
| லீக்ஸ் | 100 | 120 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 80 |
| கறிமிளகாய் | 60 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 280 | 300 | 300 |
| போஞ்சி | 70 | 80 | 80 |
| கத்தரி தம்புள்ள | 40 | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# கொழும்பு மாவட்ட விருப்பு வாக்குகள்

(கொழும்பு)

இலங்கையின் ஏழாவது பாராளுமன்றத்துக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாரிய வெற்றியடைந்துள்ள நிலையில் பெரும்பாலானோர் எதிர்பார்த்திருந்த கொழும்பு மாவட்ட வேட்பாளர்களது விருப்பு வாக்குகள் வெளியாகியுள்ளன.

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி**

விமல் வீரவன்ச -280, 672, துமிந்த சில்வா -146, 336, சம்பிக்க ரணவக்க -120, 333, தினேஸ்குணவர்த்தன 116, 860, பந்துலகுணவர்த்தன 64, 654 , திலங்க சுமதிபால 60, 848 சுசில் பிரேமஜயந்த 51, 641 , ஏ.எச்.எம்.பௌசி54,702, ஜீவன் குமாரதுங்க 51,080, காமினி லொக்குகே 49,750

**தோல்வியடைந்தோர்**

சந்தன கஸ்தூரியாராச்சி -46,289, ரோஹித்த போகொல்லாகம - 45,605, ஜீ.திலக்கசிறி-34,383, துனசிரி அமரதுங்க- 24,470, மிலிந்த மொறகொட-24, 296, பிரியலால் ஜயதிஸ்ஸ- 23,893, சுதர்மன் ரதலியகொட- 19,275, விஜயமுத சொய்சா - 18,252, ரோஹணதீர 16,654, மொஹமட் சனுன்-14,931, பெ.இராதாகிருஷ்ணன்-9,064, எம்.ரவிச்சந்திரன்-42,410

**ஐக்கிய தேசிய முன்னணி**

ரணில் விக்ரமசிங்க-2,32,957, ரவி கருணாநாயக்க-70,328, மொஹான் லால் கிரேரு-68,008, ரோசி சேனநாயக்க-66,357,விஜேதாச ராஜபக்ஷ-60,030, சுஜீவ சேனசிங்க- 52,559, பிரபா கணேசன்-42,851

**தோல்வியடைந்தோர்**

எல்.சுதத் மஞ்சு-38,134, மொஹமட் முஸம்மில்-36,669,நல்லையா குமரகுருபரன் 32,205, மொஹமட் மஹ்ரூப்-32,353, ஷபிக் ரஜாப்தீன்-30,875, நிரோஷன் பாதுங்க-29,566, ஜயந்த தசில்வா-23,480, தமயந்த தசில்வா-22,000, சுனேத்ரா ரணசிங்க-20,653, கருணாசேன் கொடிதுவக்கு-17,804, ஸ்ரீலால் லக்திலக்க- 15,633, மனோஹறன் பெரேரா-12,795, சுசில் கிந்தெலிபிட்டிய-5,963, உபுல்சிறி வீரசிங்க- 5,658,

**ஜனநாயக தேசிய முன்னணி**

சரத் பொன்சேகா-98,458, சுனில் ஹந்துநெத்தி-78,126.

# யோகர் சுவாமிகள் குருபூசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு கன்னியர் வைரவர் ஆலயும் கன்னியர் வைரவ அறநெறிப் பாடசாலை இணைந்து நடத்தும் யோகர் சுவாமி குருபூசை நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 13ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு அறநெறிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் ய.அதிருத்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன், சைவப்புலவர் க.நித்தியதசீதரன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளதுடன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (6)

# கொழும்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளை ரணிலும் , விமல் வீரவன்சவும் பெற்றுள்ளனர்

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவரது கட்சியிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் விமல் வீரவன்சவும் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

230,957 வாக்குகளை ரணில் விக்கிரமசிங்கவும் 280,672 வாக்குகளை விமல் வீரவன்சவும் பெற்றுள்ளனர். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்ட துமிந்த சில்வா 146,336 வாக்குகளையும் பாட்டலி சம்பிக்க ரணவக்க 12,033 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

ஐக்கிய தேசிய ஜனநாயக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட சரத்பொன்சேகா 98,456 வாக்குகளையும் விருப்பு வாக்குகளாக பெற்றுள்ளனர். (6)

# அனுராதபுரம் புதியநகரூடாக வாகனத் தொடரணியில் பயணித்த வாகனமொன்றுடன் மோதி ஒருவர் பலி

(கொழும்பு)

அனுராதபுரம் புதிய நகர் ஊடாக வாகனத் தொடரணியில் பயணித்த வாகனம் ஒன்றுடன் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துவிச்சக்கரவண்டியில் பயணித்த ஒருவரே விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

வாகன தொடரணியில் பயணித்த வாகனமொன்றுடன் இந்த நபர் மோதியுள்ளதுடன் குறிப்பிட்ட வாகனம் மற்றுமொரு வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதால் அதன் சாரதிக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

மோதுண்ட வாகனத்தின் சாரதி அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அனுராதபுரம் பகுதியைச் சேர்ந்த ஒருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# தன்னிறைவுப் பொருளாதாரத்தை எட்டக்கூடிய சூழலை உருவாக்குவதே எமது இலட்சியம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

மக்கள் சொந்தக் கால்களில் நின்று தன்னிறைவுப் பொருளாதாரத்தை எட்டக் கூடிய சூழலை உருவாக்குவதே தமது இலட்சியம் என ஈழ மக்கள் ஜனநாயக்க கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை முதலி கோவிலடி பொது நோக்கு மண்டப வளாகத்தில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர், எதிர்காலத்தை உருவாக்குவது மட்டுமல்லாமல் முன்னேற்றக் கூடிய நிலையில் அபிவிருத்தி அடைய வேண்டும். இதன் மூலம் மட்டுமே ஒவ்வொருவரும் தன்னி[illegible]த்தை எட்ட முடியும் என் நோக்கத்திற்காக நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

விரைவில் குடாநாட்டில் 03 ஆடைத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு அதன்மூலம்5000 பேருக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (6)


புதுவருட தினத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

கணேசன் சென்ரர்

K.K.S. வீதி, இணுவில்

ரவுசர் (எல்லா அளவுகளிலும்) -750/- சேட் (BOX) -400/-
போய் சூட் வகைகள் போய் சோட்ஸ் -50
சீகுயின்ஸ் சாறி -ரூ 10000/- இல் இருந்து- 1500/-வரை
பிறின்ரட் துணி (90'') -70/-
அண்டவெயர் -70/-
கோலம் சாறிகள் 50/- கழிவுடன்


# வலி.கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் 13 இளைஞர் கழகங்கள் பதிவு

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இவ்வாண்டில் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் 13 இளைஞர் கழகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இம்மாத இறுதிக்குள் பிரதேச செயலக மட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்கு உரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இளைஞர் விவகார அமைச்சும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து வருடாந்தம் நடத்தும் இளைஞர் விருது வழங்கல் கலாசாரப் போட்டி மாவட்ட மட்டத்திலும் தேசிய ரீதியிலும் நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகளும் மும்முரமாக நடைபெறுகின்றன.

30 வகையான கலாசாரப் போட்டிகளுக்குரிய ஆக்கங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

நியமிக்கப்பட்ட நடுவர் குழு இவ்வாக்கங்களைப் பரிசீலித்து விரைவில் வெற்றியாளர்களை அறிவிக்கவுள்ளது.

எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் சிறு கைத்தொழில் திணைக்களத்துடன் இணைத்து இளைஞர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்றையும் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடத்தவுள்ளனர். (6)


உலகின் எப்பாகத்திலிருந்தும் அனுப்பும் பணம் யாழ்ப்பாணம், நெல்லியடி, சுன்னாகம் ஆகிய கிளைகள் உட்பட்ட 71 சம்பத் வங்கி கிளைகளின் மூலம் இப்புதுவருட காலத்தில் உடனடியாக உங்கள் கரங்களில்

வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணத்தினை துரித வேகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டுமா? அதற்கான தீர்வை சம்பத் வங்கியின் ஈ ரெமிட்டன்ஸ் சேவை தருகின்றது. சம்பத் ஈ ரெமிட்டன்ஸ் மூலம் அனுப்பும் பணத்தினை தெரிவு செய்யப்பட்ட சம்பத் வங்கி வலையமைப்பில் புதுவருடத்தை முன்னிட்டு 10, 11, ஏப்ரல் 2010 திகதிகளில் காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 வரை பெற்றுக்கொள்ளலாம். 24 மணி நேரமும் செயல்படும் சம்பத் ATM மூலமும் பணத்தை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சம்பத் வங்கிக் கிளையை நாடுங்கள்.

Sampath e remittance service

www.sampath.lk 0773 933 933

சம்பத் வங்கி SampathBank


# ஓராண்டு நினைவஞ்சலி

பிறந்த திகதி 29 10 1991

இறந்த திகதி 24 03 2009



வையத்தில் எமைப்படைத்து
தெய்வமே திருக்குளத்தை வடிவெடுத்து
உத்தமியின் வயிற்றினிலே தவழ்ந்துதித்த
முழுநிலவே கஜேந்திரா
நாம் மகிழ நீ பிறந்தாய்
அந்த பரம்பொருளும் பார்வதியும்
மகிழ்வதற்காய் வானுலகம் சென்றாயோ!
அங்கிருந்து நீ மகிழ ஆண்டவனை
அனுதினமும் நாம் தொழுவோம்

**அமரர் சக்திவேல் கஜேந்திரன்**

(யா/சித்திவிநாயகர் வித்தியாலய மாணவன்)

நாளை 12.04.2010 ஆம் திகதி அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு நினைவு நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சுப்பர்மடம், பருத்தித்துறை.

பொ.சக்திவேல் குடும்பம்.

(1165)


வீண் விரயத்தைத் தவிர்க்கும்
தட்டுக் கட்டி
WIZ
Dishwash Bar
Plastic Tray
பாத்திரங்கள் கழுவும் போது சவர்காரம் கரைந்து வீணாவதைக் தடுக்கும் பிளாஸ்டிக் கவசத்துடன் வரும் விஸ் டிஷ் வொஷ் பார் என்கிற
விஸ் தட்டுக் கட்டி, பாத்திரங்களில் இருக்கும் கடுமையான கரி மற்றும் அழுக்குகளைக்கூட முழுமையாக அகற்றி பாத்திரங்களை பளிச்சிடச் செய்யும். அத்தோடு பாத்திரங்களில் உள்ள துர்நாற்றத்தையும் முழுமையாக அகற்றும். நீண்டகாலம் பாவிக்கவும் முடியும்.
பிளாஸ்டிக் கவருடன் கூடிய
விஸ்
தட்டுக் கட்டி
பாத்திரங்கள் ஜொலிக்கும், வீண் விரயம் தவிர்க்கும்

# கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் அரச சிறுவர் ஓவியவிழா

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டுக்கான அரச சிறுவர் ஓவிய விழாவினை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு தற்போது மேற்கொண்டுள்ளது.

கலாசார அலுவல்கள் திணைக்களமும் இலங்கை கலைக்கழகமும் இணைந்து இம்முறை சிறுவர் ஓவிய விழாவினை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இதன் பிரகாரம் ஓவிய விழாவுக்கான ஓவியங்களை சிறுவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஈ.எம்.அபயரத்ன தெரிவித்துள்ளார்.

ஆரம்ப சுற்றில் சிறந்த ஓவியங்களை சமர்ப்பிக்கும் சிறுவர்களில் 150 பேர் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கு ஓவியம் வரைதல் தொடர்பாக பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளது.

இவர்கள் ஓவியங்களை வரைவதற்குரிய வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு சிறந்த ஓவியங்கள் சிறுவர் ஓவிய விழாவுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இதன் போது வெற்றி பெறும் சிறுவர்கள் சர்வதேச சிறுவர் தினத்தன்று நடைபெறும் விசேட வைபவத்தின் போது விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

5 தொடக்கம் 18 வயது வரையான சிறுவர்கள் பங்குபற்றும் வகையில் 05 பிரிவுகளாக சிறந்த ஓவியங்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாக கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (6)

## கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரியபுலம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் இன்று நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (6)

# முன்னாள் அமைச்சர் சீ.பி.ரத்நாயக்க பயணித்த வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு

## இணைப்புச் செயலாளர் படுகாயம்

(கொழும்பு)

முன்னாள் கால்நடை அபிவிருத்தி அமைச்சரும் ஏழாவது பாராளுமன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்திலிருந்து ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியவருமான சீ.பி.ரத்னாயக்க பயணித்த வாகனத்தின் மீது இராகலையில் வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் முன்னாள் அமைச்சருக்கு எவ்விதமான அனர்த்தமும் ஏற்படாத போதிலும் அவருடன் பயணித்த அமைச்சின் இணைப்புச் செயலாளர் படுகாயமடைந்துள்ளார்.

துப்பாக்கி பிரயோகத்துடன் வாகனங்களை நோக்கி கற்களை வீசி தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளது. இதனால் பல வாகனங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

விருப்பு வாக்குகளை தெரிந்து கொண்டதன் பின்னர் முன்னாள் அமைச்சர் நுவரெலியா மாவட்டச் செயலகத்திலிருந்து ஹரிஸ்பத்துவவிலுள்ள தனது வீட்டிற்கு பயணித்துக் கொண்டிருந்த போதே இராகலை புரூக்சைட் எனுமிடத்தில் நேற்று முன்தினம் மாலை 3.30 மணி யளவில் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் ஆளும் தரப்பில் போட்டியிட்ட ஒருவரின் முக்கியஸ்தரே இந்த துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்த இணைப்புச் செயலாளர் எம்.தர்மபால நுவரெலியாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் சீ.பி.ரத்னாயக்க இராகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் மத்திய மாகாண சபையின் அரசியல் முக்கியஸ்தர் ஒருவர் ஐவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (6)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
25ஆவது பட்ட மளிப்பு விழாவில்
சைவசித்தாந்த முதுகலை மாணி பட்டம் பெற்ற
அருட்சொல்வாரி, சொல்லமுத வாரி, அருள்
நெறிச்செல்வர், அருள்நெறித்தமிழ ருவி,
செஞ்சொற்செல்வர், இந்து தர்மாசிரியர்,
அறநெறிக்குரு மாவை சிவநாதம் பட்டிமன்றக்
குழு நடுவரும் அமைப்பாளருமாகிய சைவசித்
தாந்த பண்டிதர் சைவப் புலவர்
செ.கந்தசத்தியதா சன் J.P.M.A.B.A.(Hons)
Dip.in Edu.SceTrd. அவர்களையும்



*யா/ஏழாலை மகாவித்தியாலய ஆசிரியர்*

சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர்
இந்து தர்மாசிரியர் **திருமதி ஜனகா
சிவசுப்பிரமணியம்** அவர்களையும் மேலும்
பல பட்டங்கள் பெற்று சிறப்பாக வாழ
வாழ்த்துகின்றோம்.

*உயர்தர வகுப்பு
மாணவர்கள்*

*சுன்னாகம்*

(1163)


# நாட்டின் நீதித்துறை சீர்குலைந்துள்ளது; முன்னாள் பிரதம நீதியரசர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் நீதித்துறை சீர்குலைந்துள்ளதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மாத்தறையில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டபோது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு சுயாதீனஆணைக்குழுக்களை நிறுவ வேண்டுமெனவும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான சட்ட விதிகள் அமுல்படுத்தப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (6)


## நண்பர்களை வாழ்த்துகின்றோம்

மிக நீண்ட காலத்திற்குப் பின்னர் ஏப்ரல் 27 ஆம் திகதி நாக விகாரையில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.சிவசுந்தரம்
திரு.ராஜநாதன்
திரு.சோதிநாதன்
திரு.கனகசபாபதி
திரு.இராஜேந்திரன்
திரு.அந்தோனிப்பிள்ளை

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் W.D.S நாணயக்கார (பண்டார) D.F.(Retire) C.M.C. கொழும்பு.

தொலைபேசி :- 038 3386518

(1162)



## திருமண வாழ்த்துக்கள்



திரு.திருமதி சிவகுமார் (சிவம்)
தேவமனோகரி
தம்பதிகள்- திருமண ஓராண்டு நிகழ்வை (11.04.2010)
இன்று தமது இல்லத்தில்
கொண்டாடுகின்றார்கள்.
இவர்களைப் பெற்றோர்,
சகோதரர்கள் இறைவன் திருவருளால் பல்லாண்டு வாழ்க
என அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

கேதீஸ் களஞ்சியம்-பண்ணாகம் தெற்கு
சுழிபுரம்

(1152)





நாளை முதல்
உங்கள் வலம்புரியில்

செங்கை ஆழியானின்




களம் பல கண்ட
யாழ் கோட்டை

யாழ்ப்பாணக்
கோட்டையின்
வரலாறு தொடராக
இடம்பெறும்.

# ஆயுள் தண்டனை முடிந்த பின்பும் நளினியை விடுவிக்க மறுப்பதேன்?

ராஜீவ் கொலையை யாரும் நியாயப் படுத்த முடியாது. ஆனால் அதைக் காரணம் காட்டி நளினியை சிறுகச் சிறுக்க கொலை செய்வது நியாயமாகாது. வாழும் நீதிமான்களில் மிக மூத்தவரான வி.ஆர்.கிருஷ் ணய்யர் ஒவ்வொரு



நளினி

புனிதனுக்கும் ஓர் இறந்த காலம் உண்டு. ஒவ்வொரு பாவிக்கும் ஒரு வருங்காலம்உண்டு என்று தனது தீர்ப்புகளில் அடிக்கடி குறிப்பிடுவார். நீதியரசர்கள் சொல்வதைவிட கூட்டணி தர்மங்கள் தான் இங்கு எல்லாப் பிரச்சினைகளையும் தீர்மானிக்கின்றன. எனவேதான் வீட்டுக்கும் வர முடியாமல் சிறையிலும் நிம்மதியாக இருக்க முடியாமல் அந்தரத்தில் அல்லாடுகிறது நளினியின் வாழ்க்கை!

அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த ராஜீவ் காந்தி 91ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி ஸ்ரீபெரும்பூதூரில் உடலில் வெடிகுண்டு தாங்கிய தனு என்ற பெண்ணால் கொலை செய்யப்பட்டார். கைதான 26 பேருக்கும் பூந்தமல்லி தடா நீதிமன்றம் தூக்குத்தண்டனை விதித்தது. உச்ச நீதிமன்றத்தில் நடந்த மேல் முறையீட்டில் 19 பேர் விடுதலை செய்யப்பட்டனர். நளினி, அவரது கணவர் முருகன் , சாந்தன் , பேரறிவாளன் ஆகிய நான்கு பேருக்கும் தூக்குத்தண்டனை உறுதியானது. ராபர்ட் பயஸ் , ஜெயக்குமார் , ரவிச்சந்திரன் ஆகிய மூவருக்கும் ஆயுள்தண்டனையாக குறைக்கப்பட்டது. பின்னர் நளினிக்கு மட்டும் தூக்குத்தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.


ஆயுள் தண்டனை என்றால் 14 ஆண்டுகள் தானே. அதன் பிறகும் என்னை விடுதலை செய்ய மறுப்பது ஏன்? என்று நளினி கேள்வி எழுப்புகிறார். நளினியை விடுவிக்க முடியாது என்று சிறை ஆலோசனைக்குழு சொன்னதை தமிழக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இன்றைய சிக்கலுக்கு காரணம் இது தான்!

அன்னை சோனியா காட்டிய கருணையால் தான் நளினியின் தூக்குத்தண்டனையே ஆயுட்தண்டனையாகக் குறைக்கப்பட்டது. அதை மீண்டும் மீண்டும் கிளப்புவது நளினிக்கு அனுதாபம் தேடும் முயற்சியே . ராஜீவ் கொலையை நாங்கள் மறக்கவும் மன்னிக்கவும் முடியாது என்று சொல்லும காங்கிரஸ் பேச்சாளர் கோபண்ணா, சட்டம் தன் கடமையைச் செய்வதற்கு அதன் போக்கிலேயே விடவேண்டுமே தவிர இதைப் பிரசாரமாக்கக்கூடாது என்கிறார்.

முன்னாள் டி.ஜி.பி. லட்சுமி நாராயணனிடம் இது பற்றி கேட்ட போது,ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் 14 ஆண்டுகள் இருக்க வேண்டும் என்பது சரியானது. ஆனால் ,தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு அது ஆயுள்தண்டனையாக குறைக்கப்பட்டு இருக்குமானால் ,ஆயுள் முழுக்கச் சிறையில் தான் இருந்தாக வேண்டும். இது இன்று இருக்கும் சட்ட யதார்த்தம். நளினி தன்னுடைய தரப்பு வாதங்களை உச்ச நீதிமன்றத்தில் வைத்து அவர்களது பரிசீலனைக்கு தனது வழக்கை கொண்டு போகலாம் என்று சொல்லுகிறார்.

முன்னாள் டி.ஜி.பி.யான வைகுந்தும் இவரது கருத்தையே வழி மொழிகிறார். ஆயுள்தண்டனை என்றால் 14 ஆண்டுகள் தான் இருக்க வேண்டும் என்று கறாரர்ண வரையறை இல்லை. ஆயுள்தண்டனை என்பதன் அர்த்தம் ஆயுள் முழுக்க தண்டனையை அனுபவிப்பது தான் . நளினியைப் பொறுத்தவரையில் அவர் ஒரு முக்கிய குற்றவாளியாக இருப்பதால் இதை உச்ச நீதிமன்றம் விசாரித்து முறையான தீர்ப்பை தரும் வரை காத்திருக்கத் தான் வேண்டும் என்கிறார் வைகுந்த்.


நளினி தொடர்புடைய குற்றம் கொடூரமானது. ராஜீவ் உள்ளிட்ட 18 பேர் கொலை செய்யப்பட காரணமான சதித்திட்டத்தின் ஓர் அங்கமாக அவர் செயற்பட்டுள்ளார் என்பதை



லட்சுமிநாராயணன்



'எவிடென்ஸ்' கதிர்



வைகுந்த்



கோபண்ணா

முக்கியகாரணமாகச் சொல்லி நளினியின் முன் விடுதலையை நிராகரித்துள்ளது தமிழக அரசு. ராஜீவ் கொலை வழக்கு தடா சட்டத்தின் கீழ் வராது.

இந்திய அரசை திகைக்கச் செய்வதோ அல்லது இந்திய மக்களிடம் அச்ச முண்டாக்குவதோ சதிகாரர்களின் நோக்கமாக இருந்தது என்பதை மெய்ப்பிக்க ஆதாரம் இல்லாததால் தடா சட்டப் பிரிவுகள் இதற்குப் பொருந்தாது.

சதிகாரர்களில் எவரும் ராஜீவ்காந்தி யைத் தவிர வேறு எந்த இந்தியரின் சாவையும் விரும்பியதற்கு சான்று ஏதும் இல்லை என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் வெளிப்படையாகச் சொன்ன பிறகு, அதே காரணத்தைச் சிறை ஆலோசனைக்குழு கூறுவதும் அதைத் தமிழக அரசு ஏற்பதும் வழக்கை மீண்டும் பின்நோக்கி கொண்டுசெல்லும் காரியமாகத்தான் இருக்கிறது..

நளினியின் வழக்கறிஞர் புகழேந்தி தெரிவிக்கையில்,

நளினி விடுதலை ஆனால் குடியிருக்கப்போகும் ராஜப்பேட்டைப் பகுதியில் இன்ஸ்பெக்ரர் மட்டும் தான் நளினியை உறுதியாக விடுதலை செய்யக்கூடாது என்று சொல்கிறார். அந்தப் பகுதியில் முக்கியமான அரசியல் பிரமுகர்கள் , தலைவர்களின் வீடுகள் , அமெரிக்கத் தூதரகம் இருக்கின்றன. அதனால் சட்டம் - ஒழுங்கு பாதிக்கப்படும் என்கிறார். நளினியின் அம்மாவும் தம்பியும் அந்தப் பகுதியில் தான் 12 ஆண்டுளாகத் இருக்கிறார்கள். அவர்கள் அங்கு இருப்பதே யாருக்கும் தெரியதாமாதிரி அமைதியாகத்தான் காலத்தைக் கழிக்கிறார்கள்.

இந்திய குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின படி கொலை வழக்கு குற்றவாளிகள் குறைந்த பட்சம் 14 ஆண்டுகள் வரை சிறையில் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. முன் விடுதலை செய்யும் போது சிறை ஆலோசனைக் குழு சம்பந்தப்பட்டவர் சிறையில் ஒழுங்காக இருந்தாரா இவரை வெளியில் விடுவதால் இவரது உயிருக்கு ஆபத்து அல்லது இவரால் மற்றவர் உயிருக்கு ஆபத்து உண்டா விடுதலை ஆகும் நபரை அவரது குடும்பத்தினர் ஏற்றுக் கொள்கிறார்களா என்பதைத்தான் பார்ப்பார்கள். இறந்து போனவர் யார் என்பது முன் விடுதலைக்கான தகுதி ஆகாது என்கிறார் புகழேந்தி. மனித உரிமையாளர்



புகழேந்தி

எவிடென்ஸ் கதிர் நடந்திருப்பது கொடூரமான குற்றம் என்று சொல்லி முன்விடுதலைக்கு மறுக்கிறார்கள். எது கொடூரம் என்பதற்கு என்ன வரையறை? மேலவளவு படுகொலைகள், லீலாவதி கொலை, தா.கிருஷ்ணன் கொலை போன்றவை கொடூரமான குற்றங்களா... இல்லையா ? அதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளும் இதுபோல் அடக்கப்பட்டார்களா? அரசாங்கத்தின் கொள்கைகள், நீதிமன்றத்தின் போக்குகள், தீர்ப்புகள் அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் அப்படி இல்லை. நளினியை விடுவிக்காமல் இருக்க அரசியல் காரணம் ஒன்றே ஒன்றுதான்.ஆனால் விடுவிக்கச் சொல்ல மனிதாபிமானக் காரணங்கள் ஏராளம் இருக்கின்றன என்கிறார் எவிடென்ஸ் கதிர்.

வி.ஆர்.கிருஷ்ணய்யர் எழுதியதுதான் மீண்டும் நினைவுக்கு வருகிறது. நீதிமன்றம் விதித்த தண்டனையால் ஒரு மனித உயிர் பறிக்கப்படும் ஒவ்வொரு வைகறைப் பொழுதிலும் மனித உரிமைக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கிறது.


### *நளினி மகள்*

நளினி - முருகன் தம்பதியருக்கு ஒரே மகள் பெயர் மேகரா அரித்ரா என்றும் அழைக்கிறார்கள். ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்படும் போது கர்ப்பமாக இருந்தார் நளினி. வேலூர் மகளிர் சிறையில் தான் பிறந்தார் மேகரா. சில ஆண்டுகள் மட்டும் அம்மாவுடன் சிறையில் இருந்த மேகரா முருகனின் அம்மாவுடன் இலங்கை அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே இருந்து சில ஆண்டுகள் கழித்து தமிழகம் வந்து நளினியைச் சந்தித்தார். இலங்கை பாஸ்போர்ட் வைத்திருந்தால் தொடர்ந்து இங்கு தங்குவதற்குத் தடை ஏற்பட்டது. எனவே முருகனின் சகோதரர் தன்னுடன் ஸ்கொட்லாண்டு அழைத்துச் சென்றுவிட்டார். இன்று அங்குதான் ப்ளஸ்டு படித்து வருகிறார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன் இங்கு வந்து நளினியைப் பார்க்க அவர் முயற்சிக்க விசா அனுமதி கிடைக்கவில்லை. இலங்கையில் யுத்தம் நடந்து கொண்டு இருப்பதைக் காரணமாகக் காட்டி அனுமதி மறுக்கப்பட்டதாம். என்னுடைய அம்மா நிரபராதி. அவர் என்னை அருகில் இருந்து படிக்கவைக்க வேண்டும். வளர்க்க வேண்டும் என்று நினைத்தார். ஆனால் அது நடக்கவில்லை. அவரது கனவை நிறைவேற்றும் வகையில் படித்து வருகிறேன். அவர் விரைவில் வெளியில் வந்து எனக்கு ஆசி வழங்குவார் என்று தனது உறவினர்களிடம் நம்பிக்கையுடன் சொல்லி வருகிறாராம் மேகரா!

*நன்றி ஆனந்த விகடன்*

# தமிழர்களை ஒன்றுபடுத்தவே அரசியல் கட்சி – சீமான்



தமிழர்களை ஒன்றுபடுத்தவே நாம் தமிழர் இயக்கம் அரசியல் கட்சியாக மாறுகிறது என்று அந்த இயக்கத் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இது குறித்து தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாம் தமிழர் இயக்கத்தை அரசியல் கட்சியாக மாற்றும் தமிழின எழுச்சி அரசியல் மாநாடு மதுரையில் மே 18 இல் நடைபெறுகிறது. இது தமிழர்களுக்கான அரசியல் கட்சியாக தொடங்கப்படுகிறது.

இந்திய தேசியம், திராவிடம் என்ற பெயர்களில் தான் இதுவரை தமிழகத்தில் கட்சிகள் உள்ளன. தமிழினத்திற்கென்று ஓர் அரசியல் கட்சியைத் தொடங்க வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகிவிட்டது.

ஈழத்தில் முன்பிருந்ததை விடவும் அதிகமாக தமிழன் கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறான். உலகம் முழுவதும் 12 கோடித் தமிழர்கள் இருந்தும் ஈழத் தமிழனுக்கு உதவ முடியவில்லை.

இலங்கை கடல் படையினால் நாள்தோறும் தமிழக மீனவர்கள் நடுக்கடலில் சித்திரவதை அனுபவிக்கின்றனர். இதுவரை 500 தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மத்திய மாநில அரசுகள் அவர்களைப் பாதுகாக்க எந்த முயற்சியும் செய்யவில்லை. அவர்களுக்கு ஆதரவாக எச்சரிக்கை விடுவதற்குக் கூட அரசுகள் முயலவில்லை.

பல்வேறு உலக நாடுகள் இலங்கை அரசு போர்க் குற்றம் செய்திருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆனால் இந்திய அரசு இந்த விஷயத்தில் மௌனமாக இருக்கிறது. இந்நிலையில் தமிழ் இனத்திற்கென்று, மொழிக்கென்று அரசியல் கட்சி அமைக்க வேண்டியது அவசியம்.


தமிழர்களை ஆள்பவர்கள் தமிழன் துயரப்படும்போது உதவவில்லை. எனவே தமிழரைப் பாதுகாக்க ஓர் அரசியல் கட்சி தேவை.

இந்தக் கட்சியின் கொடி அறிமுக விழா தஞ்சாவூரில் நடைபெறுகிறது. நாங்கள் வசதியாக வாழ்வதற்காகக் கட்சி தொடங்கவில்லை.

திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி அமைக்க மாட்டோம். அப்படியொரு நிலை ஏற்பட்டால் கட்சியைக் கலைத்துவிட்டு திரைத்துறைக்குச் சென்று விடுவேன். தமிழின அமைப்புகள் விரும்பினால் அவர்களைத் தேர்தலில் சேர்த்துக் கொள்வோம்.

கட்சி தொடங்கிய பின்னர் ஊர் ஊராகச் சென்று இளைஞர்களிடம் தமிழின உணர்வுகளைப் பரப்புவோம். அரசியல் வகுப்புள் நடத்தி இளைஞர்களை வழி நடத்துவோம். பெரியார் புலித்தேவன், ரெட்டைமலை சீனிவாசன் போன்ற தமிழினத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பெயர்களில் படிப்பகங்களைத் தொடங்குவோம்.

உடல் பயிற்சிக் கூடங்களை அமைத்து இளைஞர்களைத் தனித்திறன் மிக்கவர்களாக வார்த்தெடுப்போம். இளைஞர்களை மது, புகையிலை போன்ற தீயசெயல்களில் இருந்து மீட்டெடுப்போம் என்றார். (6)



நவீன தொழில்நுட்பத்துடன் முழுக்க முழுக்க இந்தியாவில் தயாரித்த ஜிஎஸ்எல்வி – டி3 ராக்கெட் வரும் 15ஆம் திகதி விண்ணில் ஏவப்படுகிறது.

# எல்லை தாண்டும் பிரச்சினைகளுக்கு அரசு சார்ந்த உதவிகள் கிடையாது

## தமிழக மீனவர்களுக்கு எச்சரிக்கை

(இராமநாதபுரம்)

தமிழக மீனவர்கள் எல்லை தாண்டிச் செல்லும்போது நடக்கும் பிரச்சினைகளுக்கு, அரசு சார்ந்த உதவிகள் கிடைக்காது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்ட கச்சதீவு மீன்பாடு கொண்ட பகுதி. அங்கு மீன் பிடிக்க தமிழக மீனவர்கள் செல்வதை, இலங்கை அரசு தடுத்து வருகிறது. கச்சதீவு தங்களின் உரிமை எனக்கூறி தமிழக மீனவர்கள் அப்பகுதிக்கு செல்வதும், தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை தாக்குவதும் தொடர்கிறது.

இந்நிலையில், வரையறுக்கப்பட்ட கடல் எல்லையைக் கடந்து சென்று, மீன்பிடிப்பதில் பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில், அதற்கான பாதிப்புக்களுக்கு உதவிகள் வழங்கப்பட மாட்டாது. மீறிச் செல்பவர்கள் உயிருக்கும் உத்தரவாதம் வழங்கப்படமாட்டாது என அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் ஆட்சியாளர் ஹரிஹரன் கூறுகையில், எல்லை கடந்து செல்வதால் தான் பிரச்சினைகள் ஏற்படுகிறது. அதைத் தடுக்கவே இந்த அறிவிப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

கச்சதீவு தாரை வார்க்கப்பட்ட ஒப்பந்தத்தில், தமிழக மீனவர்கள் கச்சதீவில்மீன் பிடிக்கலாம் என்ற ஷரத்து இடம்பெற்றிருக்கும் போது, அங்கு செல்வது எப்படி எல்லை தாண்டிய செயலாகும்? என மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அரசின் இந்தப் புதிய அறிவிப்பு இலங்கைக்கு சாதகமாக அமையும் என மீனவர்கூட்டமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன. (6)

# வடிவேலு – சிங்கமுத்து மீண்டும் மோதல்

வடிவேலு, சிங்கமுத்து ஆதரவாளர்கள் இடையே நேற்று முன்தினம் இரவு மோதல் ஏற்பட்டுள்ளது. இந்த மோதலில் இயக்குனரின் மாமனார் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

வடிவேலுவுக்கும் சிங்கமுத்துவுக்கும் ஏற்கனவே மோதல் இருந்து வருகிறது. வடிவேலுவுக்கு நிலம் வாங்கி கொடுத்ததில் 7 கோடி ரூபாய் மோசடி செய்துவிட்டதாக சிங்கமுத்து மீது வழக்கு. வடிவேலு புகார் கூறினார். இது தொடர்பாக சென்னை மாநகர மத்திய குற்றப்பிரிவில் வடிவேலு அளித்த புகாரின் பேரில் சிங்கமுத்து விசாரிக்கப்பட்டார்.

இது தொடர்பாக சைதாபேட்டை நீதிமன்றத்தில் வடிவேலு வழக்கும் தொடர்ந்து உள்ளார். இந்தப் பிரச்சினைகளில் கடந்த சில வாரங்களாக அமைதி நிலவி வந்தது. இந்நிலையில் வடிவேலுவுக்கும் சிங்கமுத்துவுக்கும் இடையே மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ளது.

சென்னை விருகம்பாக்கம் வேதவள்ளி தெருவில் நடிகர் வடிவேலுவின் அலுவலகம் உள்ளது. இந்த அலுவலகத்துக்கு எதிரே சினிமா இயக்குனர் கண்ணன் வீடு உள்ளது. கண்ணனுடைய மகளுக்கு கடந்த 7 ஆம் திகதி பிறந்த நாள் விழா நடந்துள்ளது. இதில் நடிகர் சிங்கமுத்து கலந்து கொண்டுள்ளார். பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ள வந்த சிங்கமுத்துவுக்கு பட்டாசுகள் வெடித்து உற்சாக வரவேற்பு அளித்துள்ளனர். சிங்கமுத்து பங்கேற்ற இந்த விழாவில் வடிவேலு பற்றியும் பேசியதாகவும் இதுபற்றிய தகவல் வடிவேலுவுக்கும் சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் இயக்குநர் கண்ணன் வீட்டில் நேற்று முன்தினம் இரவு ஒரு கும்பல் புகுந்துள்ளது. அப்போது வடிவேலு பற்றி தரக்குறைவாக விமர்சித்தது ஏன் என்று கேட்டு அவர்கள் பிரச்சினை செய்ததாக கூறப்படுகிறது.

அப்போது இயக்குனர் கண்ணனின் மாமனார் செல்வம் மட்டும் வீட்டில் இருந்துள்ளார். செல்வத்தை சிலர் தாக்கியதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக விருகம்பாக்கம் பொலிஸ் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் இயக்குநரின் மாமனாரை தாக்கிய புகாரில் பொலிஸார் ஒருவரைப் பிடித்து விசாரணை நடத்தி வருகிறார்கள். (6)

# பாரதச் செய்திகள்



# சிதம்பரம் கொடுத்த இராஜினாமாக் கடிதம் மன்மோகன்சிங்கினால் நிராகரிப்பு

(புதுடில்லி)

சத்தீஸ்கரில் மாவோயிஸ்டுகள் நடத்திய தாக்குதலில் 76 சி.ஆர்.பி.எப் வீரர்கள் கொல்லப்பட்ட சம்பவத்திற் பொறுப்பேற்று இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் இராஜினாமா கடிதம் அளித்ததாகவும் அதை இந்திய பிரதமர் மன்மோகன் சிங் நிராகரித்து விட்டதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தனது இராஜினாமா கடிதத்தை செவ்வாய்க் கிழமை ப.சிதம்பரம் அளித்தார் என்றும் அக் கடிதத்தை கடந்த புதன்கிழமை நிராகரித்து விட்டார் என்றும் இந்திய பிரதமர் அலுவலக செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

நேற்று டில்லியில் நடைபெற்ற சி. ஆர். பி.எப். நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ப.சிதம்பரம் தான்டவாடாவில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு நான் முழுப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன். சத்தீஸ்கரில் இருந்து டில்லி திரும்பியதும் பிரதமரை சந்தித்து எனது முடிவை எழுத்து மூலம் அளிப்பேன் என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில் அவரது கடிதம் நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# சிதம்பரம் ராஜினாமா செய்யக்கூடாது; பாரதிய ஜனதா கட்சி தெரிவிப்பு

நக்சலைட்கள் தாக்குதலில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 76 பேர் பலியான சம்பவத்திற்குப் பொறுப்பேற்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் ராஜினாமா செய்யக் கூடாது. அவர் ராஜினாமா செய்தால் அது நக்சலைட்களுக்கு கிடைத்த வெற்றியாக அமைந்துவிடும் என பா.ஜ.கட்சி தெரிவித்துள்ளது.

சட்டீஸ்கர் தந்தேவாடா மாவட்டத்தில் நக்சலைட்கள் நடத்திய தாக்குதலில் மத்திய ரிசர்வ் பொலிஸ் படையை சேர்ந்த 76 பேர் பலியாயினர். இச்சம்பவத்திற்கு பொறுப்பேற்று மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் தன் பதவியை ராஜினாமா செய்வதாக தெரிவித்தார். ஆனால் பிரதமர் அதை ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்துவிட்டார்.

இதுகுறித்து பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் ராஜிப் பிரதாப் ரூடி கூறியதாவது, மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் தன் பதவியை ராஜினாமா செய்வதை பா.ஜ.க. விரும்பவில்லை. தற்போதைய சூழ்நிலையில் அவர் ராஜினாமா செய்தால் அது நக்சலைட்களுக்கு கிடைத்த வெற்றியாக அமையும். நாட்டின் உள்துறை அமைச்சர் பதவி விலகுவதாகத் தெரிவித்திருப்பது, கருத்துத் தெரிவிக்க வேண்டிய விஷயம் அல்ல. பாராட்டத்தக்கது. அவரது ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றார். (6)

# இமயமலையின் உயரம் 8 ஆயிரத்து 848 மீற்றர்

## சீனா, நேபாளம் ஒப்புதல்

வெண் பனியால் மூடப்பட்டுள்ள இமயமலை உலகிலேயே மிக உயர்ந்த மலை என பெருமை பெற்றுள்ளது. இது சீனா, நேபாள நாடுகளின் எல்லையில் உள்ளது. இந்த நிலையில் இமயமலையின் உயரம் என்ன? என்பதில் 2 நாடுகளிடையே பல வருடங்களாக சர்ச்சை நிலவி வந்தது.

இமயமலையின் பாறைகளின் அளவை மட்டும் வைத்து அதன் உயரம் 8844 மீற்றர் என சீனா கூறிவந்தது. ஆனால் அதன் மீது படர்ந்துள்ள 4 மீற்றர் பனிப் படலத்துடன் சேர்ந்து உயரம் 8848 மீற்றர் என நேபாளம் கூறியது.

இது குறித்த பேச்சுவார்த்தை நேபாள தலைநகர் காத்மண்டுவில் நடந்தது. முடிவில் இமயமலையின் பாறை மற்றும் படர்ந்து கிடக்கும்பனியின் அளவுடன் சேர்த்து அதன் உயரம் 8848 மீற்றர் என முடிவு செய்யப்பட்டது. இதை சீனா, நேபாளம் ஆகிய 2 நாடுகளும் ஒப்புக் கொண்டன. இதன்மூலம் இமயமலையின் உயரம் குறித்த சர்ச்சை முடிவுக்கு வந்தது.

இமயமலையில் ஆயிரக்கணக்கான மக்கள் ஏறுகின்றனர். 1953 ஆம் ஆண்டு முதன் முதலாக ஷெபா டென்சிங் நார்கே, எட்மண்ட் ஹிலாரி ஆகியோர் இம்மலையில் ஏறினார்கள்.

1856 ஆம் ஆண்டு முதன் முதலில் இமயமலையின் உயரம் அளக்கப்பட்டது. அன்று இருந்தே இதுகுறித்து சர்ச்சை எழுந்தது. 1955 ஆம் ஆண்டு இமயமலையின் உயரம் இந்தியா சார்பில் அளக்கப்பட்டது. அப்போது 8848 மீற்றர் என இந்தியா ஒப்புக் கொண்டது.

இதற்கிடையே இமயமலையின் உயரம் 8848 மீற்றர் அல்ல. அது நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது என புவியியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (6)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### முடிவு!

இளகிய மனதிற்குள்
புதைந்திருக்கும் சுமைகள்
ஆறாத வடுவாக - இங்கே
ஆட்பரிக்குதம்மா...
ஆற்றுவார் யார் என்று
ஊரூராய் அலைந்தாலும்
பாரினில் என்னைப் பிரசவித்து
துன்பங்களை அனுபவிக்கச்செய்து
வேடிக்கை பார்க்கும்
இறைவா - நான்
கலங்குகின்ற ஓசை - உன்
செவிகளுக்கு கேட்கவில்லையா - என்
வாழ்க்கையின் முடிவுநாள்வரை
கலங்கிய விழிகளோடுதான்
வாழ்வைத் தொடங்குவதா?
அல்லது இந்த நிமிடமே - என்
வாழ்வைத் தொலைப்பதா?
பதில் கூறு இறைவா! - என்
வாழ்க்கையின் முடிவு
நாள்வரை - இதுதானா
நீ எனக்குத் தந்த பரிசு

நவரத்தினம் சதீஸ்
கந்தர்மடம்

### தீர்வு கிடைக்குமா?

கண்ணீர் கூட கானலாகிவிட்டது
காயங்களின் வலியோடு
காத்திருந்து...
ஏமாற்றப்பட்டு விட்டோம்
ஏக்கத்தோடு இன்னும்
ஏதாவது தீர்வு கிடைக்குமா?
என்று உள்ளத்தில் ஒரு
புள்ளி முடிவைத் தன்னிலும்
புகைச்சலோடு மனம்
புழுங்குகிறது...

பூலக்சி
கல்லுவம்

### காதல்

காகிதத்தில் தந்தால்
தண்ணீரில் கரையுமென்று
கண்ணிலேயே தந்தேன்
காதலை அது
உன் அம்மாவின்
கண்ணீரில் கரையுமென்று
சற்றும் எதிர்பார்க்கவில்லை

- ஆழ்வார் -

### பிரிவு

என் பிரியமானவனே!
வாழ்க்கை எனும்
வற்றாத நதியில்
உல்லாசமாக
வசந்த காலத்தை நோக்கி
எதிர்நீச்சல் போட்டபோது
புயலாய் தாக்கியது
வன்னிச் சுனாமி
சிதைத்தது எங்களின்
எதிர்காலத்தை – இன்று
பிரிவு எனும்
பரிசுபெற்று
காத்திருக்கிறோம்
நிச்சயம் சங்கமிப்போம்
என்ற நம்பிக்கையோடு

க. தேவன்
புனர்வாழ்வு நிலையம் கைதடி

### இமயம் தொட...

பிறர் உணர்வைக்காட்டி
உயர்வடைந்த நீ...
அவருக்காய் வாழப்பழகு
அதை விடுத்து
கைகொட்டிச் சிரிப்பது
ஆணவத்துடன் நடப்பது
அழிவுக்கான பயணமே

மாவை. நா.கஜேந்திரா

### போரில் பெற்றோரை இழந்து

போரவலத்தின் காரணமாய்
பெற்றோரை இழந்து
எதிர்கால வாழ்வுதனை
எண்ண முடியாதவனாய்
கண்ணில் நீர் சொறிய
கலங்கி நிற்கின்றாயே

வி.எழில்
அல்வையூர்

### சிந்தனை செய்து மீண்டெழு

சிரசல் கைவைத்து
சிந்திய கண்ணீருடன்
சிந்தை நொந்து நிற்கும்
சிறியவனே கலங்காதே
சிந்தனை செய்த
மீண்டும்
சிறப்பான வாழ்வுகாண


அ.ம ஜெபரத்தினம்
கரவெட்டி

### சான்றோன்

ஈன்றபொழுது தன் மகனை
சான்றோன் எனக் கேட்ட தாயே!
இப்படி என்னை நடுவழியிலே
விட்டுச் செல்ல இக்கொடிய
யுத்தம் உன் உயிரை
பறித்து விட்டதே அம்மா

அ.செந்தீபன்
கல்வயல்

## மௌனத்தின் தேடல் – 14



### கண்திறந்து பாராயோ!

அன்னத்திற்காக அலைகின்ற
அகதியாக்கியது–ஏனோ!
முட்கம்பி வேலிக்குள்
முடங்க வைத்தது–ஏனோ!
இறைவா!
நீ கண்திறந்து
பாராயோ?–ஒருநிமிடமேனும்!

பருத்திநகர் ரகு

ஏன் இந்த துயரம் அம்மா
எமக்கிருந்த அவலம் அம்மா
என்ன பாவம் செய்தோம் நாம்
இந்த நிலை ஏற்பட்டதே
பெற்ற மனம் துடிக்கின்றதே
பேதையர் நாம் என்ன செய்வோம்
உற்ற துயர் தீர்க்கவழி ஏதும்
இன்றித் தவிக்கின்றோம்.
கல்மனதும் இளகாதா
கடவுளுக்கும் கண்இல்லையா
காணாமல் இருக்கின்றானே...

த. கோகிலதாஸ்
புனர்வாழ்வு நிலையம்
கைதடி

புள்ளி மயிலென - பள்ளி
சென்றிடும் பத்து வயதினிலே - நாங்கள்
செத்து மடிந்திடும் பூமியில் - நின்றோம்
யுத்தத்தின் கொடுமையிலே
அன்னை இழந்து உறவை இழந்து
வாடுகிறோம் வறுமையிலே
சிரசில் கரம் வைத்து உங்களை
கேட்கிறோம் உதவிடு மானிடமே

சரண்ராஜ்
யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி.

### மீண்டும் எழுவோம்

*சிந்தனை தருமாறி*
*சிரம் மேல் கரம் பதித்து*
*கண்கள் குளமாகி*
*கலங்கும் என் சோதரனே*
*முள்ளி வாய்க்காலில்*
*முட்கம்பி வேலிக்குள்*
*ஐ.நா. சாசனமும்*
*மனிதமும் மரித்ததால் – உன்*
*உறவினைப் பிரிந்தாயா*
*கலங்காதே – நாம்*
*மீண்டும் எழுவோம்*

இணுவை சுகந்தி

### கவலை விடு என் தோழா

பரீட்சையில் தோல்வி என்ற
கவலையா தோழா உனக்கு
கவலைவிடு என் தோழா!
உந்தன் கண்ணீரைத்
துடைத்துவிடு என் தோழா
தோல்விகளைக் கண்டு
துவண்டு போகாமல்
தூற்றலைக் கண்டு
தலை குனியாமல்
தன்னம்பிக்கையென்னும்
படகில் ஏறிச் சென்றால்
வெற்றியென்ற இலக்கை
நிச்சயம் அடைவாய் நீ!

செல்வநாயகம் ரவிசாந்
குப்பிளான்.

### சுமைதாங்கி

சிரசின் மேற்தாங்கிய இரு கரங்கள்
கண்ணீர் சிந்திய இருவிழிகள்
இதயத்தில் தேங்கியுள்ள துயரங்கள்
அத்தனையும் தாங்கும்
சுமை தாங்கிக் கல்லாக
மாற்றியது யாரு?

கந்த ஞானமுத்து
கைதடி, மேற்கு 02

### யாருமே இல்லையா

உறவுகளை இழந்து
உள்ளம் கலங்கி
துடிக்கும் மனிதனே
உன் கண்ணீருக்கு
பதில் சொல்ல இந்த
உலகத்தில் யாருமே இல்லையா

த.கேமா
கொக்குவில்

### இழப்புக்கள்

ஊர் இழந்தேன்
உறவு இழந்தேன்
என் உணர்வுகளை இழந்தேன்
முட்கம்பி வேலிக்குள்
வாழ்க்கையினை இழந்து
கண்ணீர் வடித்து நிற்கிறேன்

மா.சுமதினி
கல்வயல்.

### அழுகை

நாம் எதை நினைத்து அழுவது
இழந்ததை நினைத்து அழுவதா?
எதிர்காலத்தை நினைத்து அழுவதா?
இழந்த உறவுகளை நினைத்து
அழுவதில்லை
ஏன் அது எமக்கு எதிர்காலம்.
இன்று அரசியல்வாதிகளை எண்ணி
அழுகின்றோம்
அவை எமக்கு சாவுமணி.


யோ. மதுசன்
கிளிநொச்சி

### தர்மம்

அழுது கொண்டேயிரு
உனக்கும் இந்த
உலகிற்கும்
தொடர்புண்டு என
உன் கண்ணீர்
பெருகி ஆறாகி அலையாகி
தீயவரை அழிக்கும் வரை
அழுது கொண்டேயிரு
நீ தியாகி!

இந்திரபுத்திரன்
மாவை கலட்டி

## சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 15




அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.


எனும் முகவரிக்கு 16.04.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# இலங்கையிலே தமிழ்க்கல்வியும் ஆய்வும் தொடர்ச்சியும் வளர்ச்சியும் 3

வளரும் தமிழ் என்ற தமது நூலில "சோமலெ" பின்வருமாறு கூறினார்: "இலங்கை அரசியலாளர் மொழி விசாரணைக் குழு ஒன்றை நியமித்துள்ளனர். இக்குழுவினர் வழக்கில் இருக்கும் சொற்களைச் சேகரித்தும் வழக்கில் இல்லாத சொற்களுக்குப் புதிய சொற்களை ஆக்கியும் விஞ்ஞானத்துறைகள் அனைத்திற்கும் கலைச்சொற்களை



ஆறுமுகநாவலர்

ஆக்கியுள்ளனர்; தமிழ் மரபு சிதையாமலும் இசைநயம் குறையாமலும் இலக்கண வழுவின்றியும் இவை ஆக்கப்பட்டிருப்பதால், புதிதாகப் படிப்பவர்க்கு இவை சிலசமயம் வியப்பூட்டும். இப் பெருமுயற்சி மிகவும் பாராட்டுக்குரியது."

உலகினைத் தழிழரும் தமிழரை உலகும் செவ்வனே அறிந்து கொள்ள வேண்டும் என்ற இலட்சியத்துடன் செயற்பட்ட தனிநாயகம் அடிகளார் பிறநாட்டாரைத் தமிழியல் ஆய்வுகளில் ஈடுபடுத்த மேற்கொண்ட பாரிய முயற்சிகள் விதந்து குறிப்பிடத்தக்கவை.

இலக்கியத்தின் உருவம், உள்ளடக்கம், மனிதவாழ்வில் அதன் வகிபாகம், மொழிவழக்கு முதலானவை குறித்தும் எழுத்தாளரின் நோக்கம், நிலைப்பாடு, உலகப்பார்வை போன்றவை பற்றியும் வேறுபட்ட கோட்பாடுகளை வரித்துக் கொண்ட இலக்கியவாதிகள் மத்தியில் 1950 களின் பிற்பகுதியிலும் 1960 களிலும் நடைபெற்ற ஆரோக்கியமான கலந்துரையாடல்களும் சர்ச்சைகளும், இலக்கிய ஆர்வமும் வாசிப்புப் பழக்கமும் உலக விளக்கமும் வளர உதவின.

தொகுத்து நோக்குமிடத்து, "முன்னோர் மொழிபொருளேயன்றி யவர்மொழியும் பொன்னேபோற் போற்றும்" மரபு வழிக்கல்வியும், ஏன்? எப்படி? எதற்கு? என்று விசாரித்து விடை காண விழையும் நவீன முறைக் கல்வியும் ஆய்வுகளும் இலங்கையில் தொடர்ந்தமை புலனாகும்.

சமீபகாலத்தில் நவீன ஆய்வுகளைப் பொறுத்தவரையிலும் சரி, மரபுவழிப் புலமையைப் பொறுத்தவரையிலும் சரி ஒரு வறட்சிப்போக்குத் தென்படுகிறது. தமிழ்ப்புலமை என்பது தமிழைச் சிறப்பாகப் படிப்பவர்களுக்கு மட்டும் உரியதல்ல. வேறு துறைகளில், அரச நிர்வாகப் பதவிகளில் பணியாற்றிய பலர் மொழி, இலக்கிய, பண்பாட்டு ஆய்வுகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். புகழ்பெற்ற புவியமைப்பியல், புவிப்பௌதிகவியல் விஞ்ஞானியான கலாநிதி ஏம்.எஸ். கிருஷ்ணன், பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், அவரை நாடி ஆலோசனை கேட்குமளவுக்கு வைணவத்தில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார். ஆர்வத்தின் விளைவான தேடல் வேறு, அப்போதைய தேவைக்கான நுனிப்புல் மேய்தல் வேறு. தங்கள் பண்பாட்டுப் பாரம்பரியத்தை அறியும் ஆர்வமும், வாசிப்புப் பழக்கமும் அருகிய நிலையில், ஆய்வுக்கான எந்த எழுவினாவின் உறுத்தலுமின்றி, பதவி உறுதிக்கான ஒரு தேவையை நிறைவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் தறுவாயில் ஆசிரியரை நாடி ஆய்வு செய்வதற்கு ஏதேனும் தலைப்புக் கேட்கும் மாணவர் பலர்.

புத்தகங்களைத் தங்கள் பெயரில் வெளியிடும் ஆசை பலரிடத்துக் காணப்படுகின்றது. எழுதுபவற்றின் உண்மையை உறுதி செய்துகொள்வதற்கான அவகாசம் கிடைப்பதும் அரிதாயிருக்கின்றது. புதுமையானவை என்று கூறப்படும் பல விடயங்களைப் பற்றி தெளிவுற அறிந்திடாமல் நிறைய மொழிந்திடும் ஒரு போக்கு பலரிடம் வளர்ந்து வருகின்றது. கணிப்பொறியைக் கையாளும் திறனும் உயரிடச் செல்வாக்கும் இருந்தால் புத்தகம் சந்தைக்கு வராமலே இலக்கியப் பரிசும் கிடைக்கலாம்.தங்களை முதன்மைப் படுத்துவதிலும் முன்னெப்போதும் இல்லாதளவு ஆர்வம் இன்று காணப்படுகின்றது. வேண்டியவர்களையும் வெகுசன ஊடகத்தினரையும் கூப்பிட்டுப் புத்தக வெளியீடுகளை நடாத்தினால் விளம்பரத்தை உறுதி செய்து கொள்ளலாம். விமர்சனங்களையும் விருப்பமானவர்களைக் கொண்டு எழுதுவித்து வெளியிடலாம். சந்தைப்பொருளாதார அமைப்பில் அவை இலாபந் தருவனவாகும். எவ்வாறாயினும், சுமார் மூன்று, நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் இடம்பெற்ற காய்தல் உவத்தலற்ற, காரசாரமான விமர்சனங்களும் விவாதங்களும் எண்ணிப்பார்க்குமிடத்து உற்சாகமளிப்பவை.

நுகர்வுச் சார்புவாதம் (Consumerism) கோலோச்சும் இன்றைய நிலையிலும், ஆய்வு முறையியலுக்கு அமையச் சிலர் மேற்கொள்ளும் ஆராய்ச்சிகள் தமிழ்க் கல்வியினதும் ஆய்வினதும் தொடர்ச்சியை உறுதி செய்வனவாகவும் நம்பிக்கையூட்டுவனவாகவும் விளங்குவதைக் குறிப்பிடாதொழிதல் சாலது.

இச்சந்தர்ப்பத்தில், இன்றைய கல்வி முறையைச் சற்று நோக்குவதும் தவிர்க்கமுடியாதது. எப்படியான சமூகத்தை நாங்கள் கட்டியெழுப்ப விரும்புகிறோம் என்பதற்கு ஏற்றதாய் கல்விமுறை அமையவேண்டும் என்று கலவிமான்கள் கூறுகிறார்கள். ஆனால், மனித விழுமியங்களைப் பேணி வளர்ப்பதை அடிப்படையாகக் கொண்டதாகக் கல்விமுறை இருக்கவேண்டும் என்று அடிக்கடி பேசப்பட்டாலும், சந்தைப் பொருளாதார அமைப்பில் வேலைக்கு அமர்த்தக்கூடியவர்களைத் தயாரிப்பது குறித்தே அதிகார வர்க்கத்தின் கவனம் கூடுதலாகச் செல்வதாகத் தோன்றுகின்றது. "மெய்ப்பொருள்" காண்பதையோ, "தீதொரீ, நன்றின்பால்" மனதைச் செலுத்துவதையோ, "உலகத்தோடு ஒட்ட ஒழுகு" தலையோ, "தாமின்புறுவது உலகின் புறக்கண்டு" களித்தலையோ பற்றி இன்று எத்தனைபேர் யோசிக்கிறார்கள்? கூடுதலாகச் சம்பாதிப்பதிலும் மேலுக்கு வருவதிலும் மற்றவர்களைப் பின்தள்ளுவதிலுமே பெரும்பாலானோர் குறியாக உள்ளனர். அறிவு வளர்ச்சியில் இன்றியமையாத முக்கியத்துவம் வாய்ந்த ஆசிரியர்களின் வகிபாகம் இன்று எத்தகையதாக இருக்கின்றது? ஆசிரியப்பணி என்பது விரும்பி ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு வாழ்க்கைத் தொழிலாக(vocation) அமைய வேண்டுமேயன்றி, கூடிய வருவாய் தரக்கூடிய இன்னொரு, தனியார் வகுப்புக்களை நடத்துவது போன்ற, வேலைக்கான படிக்கல்லாகக் கொள்ளப்படுதல் சாலது.

பேராசிரியர்
**சி.தில்லைநாதன்**

கல்வியைப் பொறுத்தவரை பாடநூல்கள் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை விளக்கவேண்டியதில்லை. அவை ஐயந்திரிபுக்கு அப்பாற் பட்டவையாக, அதிகார பூர்வமானவையாக மாணவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவன. அவற்றை வெளியிடுபவர்கள் எவ்வளவு பொறுப்புணர்வுடன் இக்காலத்தில் நடந்துகொள்கிறார்கள்? பாடநூல் ஒன்றிலுள்ள தமிழ்நெடுங்கணக்கில் அ ஃகேனம் முதலிலே தரப்பட்டுள்ளது.

(தொடரும்)

## இலங்கை அகதிகள் குறித்த அவுஸ்திரேலியாவின் தீர்மானத்திற்கு சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்

• (கொழும்பு)

இலங்கை அகதிகளுக்கு புகலிடம் வழங்குவதில்லை என அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அண்மைய தீர்மானத்திற்கு சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் காலங்களில் சரணாகதி அளிப்பதில்லை என அவுஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும், 1951 ஆம் ஆண்டு ஐ.நா. பிரகடனத்திற்கு இந்த தீர்மானம் புறம்பானது எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகளை நசுக்கும் முயற்சியில் அவுஸ்திரேலியா ஈடுபட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் சாம் சப்பாரி தெரிவித்துள்ளார்.

நியாயமான முறையில் அடைக்கலம் கோருவோர் சட்டத்திற்கு புறம்பான முறையில் தடுத்து வைக்கப்படக் கூடிய நிலைமை ஏற்படக் கூடுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் இந்தத் தீர்மானம் ஆசிய பசுபிக் பிராந்திய வலய நாடுகளுக்கு விடுவிக்கப்பட்ட எச்சரிக்கையாக கருதப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களின் நடவடிக்கைகளை முடக்கும் நோக்கில் அவுஸ்திரேலியா இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அந் நாட்டு குடிவரவு குடியல்வு அமைச்சர் கிறிஸ் ஏவன்ஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் காலங்களில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பிக்கும் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தானிய விண்ணப்பங்கள் தற்காலிகமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என அமைச்சர் தெரிவித்துள்ளார். (6)

## தாய்லாந்து நாட்டவர் தூக்கிட்டு தற்கொலை

### நீர்கொழும்பில் சம்பவம்

(கொழும்பு)

நீர்கொழும்பு பிட்டிபனை பிரதேசத்தில் தாய்லாந்து நாட்டவர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

பிட்டிபனை மீன் விற்பனை சந்தை அருகில் களப்புப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சமுதுரு சம்பத என்ற ரோலர் மீன்பிடிப் படகில் தூக்கிட்ட நிலையில் இறந்தவரின் சடலம் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

சூனவினலுக் (55 வயது) என்ற தாய்லாந்து நாட்டவரே சம்பவத்தில் இறந்தவராவார். இவர் தான் பணியாற்றிய ரோலர் படகிலேயே நைலோன் கயிற்றின் உதவியுடன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.இந்த ரோலர் மீன்பிடிப் படகின் பிரதான ஓட்டுனர் என தெரிய வருகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் முற்பகல் சம்பவ இடத்திற்குச் சென்று நீர்கொழும்பு மேலதிக நீதிவான் உபுல் ராஜ கருணா விசாரணைகளை நடத்தினார்.

சந்தேகத்துக்கிடமான மரணம் என்ற அடிப்படையில் நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (6)

## இலங்கை, ஆப்கானிஸ்தான் அகதிகளுக்கு அடைக்கலம் வழங்கப்படமாட்டாது

### அவுஸ்திரேலியா அறிவிப்பு

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமாக பிரவேசித்து அடைக்கலம் கோருவோருக்கு அரசியல் புகலிடம் வழங்கப்பட மாட்டாது என குறிப்பிடப்படுகிறது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் குறித்த இரு நாடுகளினதும் அகதிகளை ஏற்றுக்கொள்வதில்லை என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நாடுகளில் தற்போது நிலவும் சூழ்நிலையை கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக குடிவரவு தொடர்பான அவுஸ்திரேலிய அமைச்சர் கிறிஸ் ஏவன்ஸ் தெரிவித்துள்ளார். (6)

## ஆளும் கட்சியின் தேர்தல் வெற்றிக்கு இந்தியப் பிரதமர் வாழ்த்து

(கொழும்பு)


ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் ஈட்டிய வெற்றி குறித்து இந்திய பிரதமர் மன்மோகன் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தேர்தல் வெற்றி தொடர்பில் பிரதமர் மன்மோகன் சிங் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தொலைபேசி ஊடாக மன்மோகன் சிங் இந்த வாழ்த்தினை தெரிவித்துள்ளார். (6)

# கட்சிகொள்கைகள் தொடர்பில் மீளாய்வு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

கட்சிக் கொள்கைகள் தொடர்பில் மீளாய்வு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி பாரிய பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதென அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

தேர்தல் முடிபுகள் முழுமையாக வெளியிடப்பட்டதன் பின்னர் கட்சிக் கட்டமைப்பில் பல்வேறு அடிப்படை மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இறுதித் தேர்தல் முடிபுகள் பூரணமாக வெளியிடப்பட்டதன் பின்னர் இந்த விட யங்கள் குறித்த கட்சியின் சிரேஸ்ட தலைவர்கள் விரிவாக ஆராயத் தீர்மானித்துள்ளனர்.

கட்சியின் சில சிரேஸ்ட உறுப்பினர்கள் கடந்தத் தேர்தலில் ஏன் தோல்வியைத் தழுவினார்கள் என்பது குறித்து ஆராயப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்தத் தேர்தலில் அதிகளவு மக்கள் வாக்களிக்கவில்லை எனவும் வாக்களிப்பில் மக்கள் நாட்டம் காட்டமையும் தேர்தல் தோல்விக்கு ஓர் காரணமாக அமைந்துள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சி பெற்றுக்கொண்ட வாக்குகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் குறிப்பாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பீடு செய்யும் போது ஆளும் கட்சி இந்தப் பொதுத்தேர்தலில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வர்காளர்களை இழந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தேர்தல் ஆணையாளர் தனது அதிகாரங்கள முழு மையாக பயன்படுத்தக் கூடிய ஓர் பொறிமுறை நடைமுறையில் இல்லாமை சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களை நடத்துவதில் சிக்கல் நிலைமையை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளதுடன் அரசாங்கம் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் செயற்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார். (6)

# மாணவர்களுக்கான மதிய உணவு வழங்குதலில் ஏற்படும் குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கும் நடவடிக்கைகளின் போது இடம்பெறுவதாகக் கூறப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு கல்வியமைச்சு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அண்மைக் காலங்களாக மாத்தறை மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் பாடசாலைகளில் உணவு உட்கொண்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் சம்பவங்களைத் தொடர்ந்து மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்வது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு விசேட ஆலோசனைகள் வழங்கப் பட்டுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே உரிய முறைப்படி உடன்படிக்கை செய்து கொண்ட விநியோகஸ்தரிடம் இருந்தே உணவுகளைப் பெற்றுக் கொள்வதுடன் ஒரு விநியோகஸ்தரினால் ஒருநாளில் 80 மாணவர்கள் அல்லது இரண்டு வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு மாத்திரம் உணவு விநியோகம் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

உணவு விநியோக நடவடிக்கைகளின் போது விசேட மேற்பார்வைகள் இடம்பெறுவதுடன் சுகாதாரத் துறை அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மாணவர்களுக்காக ஏற்கனவே குறித்தொதுக்கப்பட்ட உணவு வகைகள் மட்டுமே விநியோகிக்கப்படுவதை அதிபர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கல்வியமைச்சின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார். (6)

# தேர்தல் வெற்றியை கொண்டாடும் வகையிலான ஊர்வலங்கள், கூட்டங்களை நடத்தக்கூடாது

## பவ்ரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

தேர்தல் வெற்றியை கொண்டாடும் வகையிலான ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்களை நடத்தக் கூடாது என பவ்ரல் அமைப்பு சகல அரசியல் கட்சிகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் தேர்தல் வன்முறைச் சம்பவங்களுக்கு வழிகோலும் என பவ்ரல் அமைப்பின் நிறை வேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

எனவே தேர்தலில் வெற்றியீட்டியவர்களும் ஆதரவாளர்களும் இவ்வாறான செயலில் ஈடுபடுவதனை தவிர்க்குமாறு அவர் கோரியுள்ளார்.

தேர்தலின் பின்னரான வன்முறைகளை தவிர்ப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படவேண்டுமென குறிப்பிட்டுள்ளார். (6)

# குறுகிய கால இடைவெளியில் ஐந்து ஆசனங்களை வெல்லக் கிடைத்தமை திருப்தி அளிக்கின்றது

## விஜிதஹேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

குறுகிய கால இடைவெளிக்குள் பிரசாரங்களை மேற்கொண்டு ஐந்து ஆசனங்களை வென்றமை திருப்தி அளிப்பதாக ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மக்களின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கும் ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்கும் எதிர்வரும் ஏழாவது பாராளுமன்றத்தில் தாம் காத்திரமான முறையில் செயற்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஐந்து ஆசனங்களை மட்டும் வென்ற போதிலும் பாராளுமன்றத்தில் மக்களுக்காக குரல் கொடுப்போம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு ஒரு ஆசனத்தையேனும் வெல்லாது என அரசாங்கம் விடுத்த அறைகூவல்களை தமது கட்சி பொய்ப்பித்துள்ளதென தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இரண்டு ஆசனங்களையும், களுத்துறை, கம்பஹா மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு ஆசனத்தையும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு வென்றுள்ளது.

தேசியப்பட்டியல் மூலம் மற்றுமொரு ஆசனம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட தினம் முதல் அரசாங்கம் பாரியளவு அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாக விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டுவதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பாரியளவில் பொதுச்சொத்துக்களைப் பயன்படுத்தியதாக தெரிவித்துள்ளார். (6)

# கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆசிரியர்களின் சேவைக்காலத்தை நீடிக்க தீர்மானம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் இருந்து ஓய்வு பெற்ற நிலையில் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு மீள் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் சேவைக் காலத்தினை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கு மாகாணக் கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் மீள் நியமனம் பெற விரும்பும் ஆசிரியர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என்று மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் உபுல் வீரவர்தன அறிவித்துள்ளார்.

கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் குறிப்பிட்ட பாடத்துறையுடன் தொடர்புடைய ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் கடந்த 2009 ஆம் ஆண்டு ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் செய்யப்பட்டனர்.

பாடசாலைகளில் தொடர்ந்தும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுமாயின் ஒப்பந்த ஆசிரியர்களின் சேவைக்காலத்தை நீடிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

ஒப்பந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்பட்ட பாடங்களின் பெறுபேறுகள், அதன் வளர்ச்சி வீதம், ஏனைய விடயங்களில் ஆசிரியர்களின் பங்களிப்பு மற்றும் கடமை நிறைவேற்று அறிக்கை என்பவற்றின் அடிப்படையில் சேவை நீடிப்பு வழங்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (6)

# தேர்தல் முடிபுகள் அறிவிக்கப்படாமையையடுத்து கண்டி மாவட்ட வாக்காளர்கள் ஏமாற்றம்

(கொழும்பு)

பொதுத்தேர்தலின் முடிபுகளை எதிர் பார்த்திருந்த கண்டி மாவட்ட கட்சி வேட்பாளர்களும் வாக்காளர்களும் பெரும் ஏமாற்ற மடைந்தனர்.

நாவலப்பிட்டி தேர்தல் தொகுதியில் பல்வேறு தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றதாக தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் அறிவித்ததையடுத்து நாவலப்பிட்டி தேர்தல் தொகுதியில் மீண்டும் ஒரு தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் அறிவித்தது. இதையடுத்தே மேற்படி ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க நேற்றுமுன்தினம் கண்டி மாவட்ட பிரதான நகரங்களிலும் தோட்டப் பகுதிகளிலும் அமைதியான சூழ் நிலை காணப்பட்டது. பிரதான நகரங்களிலும் வாகனப் போக்குவரத்து குறைவாக காணப்பட்டதோடு சன நடமாட்டமும் குறைந்து காணப்பட்டது.

ஒரு சில வியாபார நிறுவனங்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

மேலும் தேர்தல் முடிபுகள் நேற்று முன் தினம் மாவட்ட தொகுதிவாரியாக வெளியான போது கட்சி ஆதரவாளர்கள் அமைதியாக இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்ததோடு புசல்லாவை, கம்பளை, கண்டி பிரதான நகரங்களிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)



# கோலங்கள் திருச்செல்வம் ஹீரோ ஆகிறார்!



பொன்னர் சங்கர், சிங்கம் உட்பட பல படங்களில் நடிக்கும் போஸ் வெங்கட் விரைவில் இயக்கும் படம் முத்துக் குமாரின் காதலி. இதில் கோலங்கள் திருச்செல்வம் ஹீரோ.

நவ்னீத் இசை. சேவிலோ ராஜா ஒளிப்பதிவு, திருச்செல்வம் ஜோடியாக பாடகசாலை ஸ்ருதி நடிக்கிறார். அடுத்த மாதம் ஷூட்டிங் தொடங்குகிறது என்றார் போஸ் வெங்கட்.

# விஷாலுக்கும் டைரக்டர் பாலாவுக்கும் மோதலா?

அவன் இவன் படப்பிடிப்பில் விஷாலுக்கும் டைரக்டர் பாலாவுக்கும் மோதல் ஏற்பட்டுள்ளது. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. தென்காசியில் சில நாட்கள் மட்டுமே ஷூட்டிங் நடந்தது. செகண்ட் ஹீரோயின் கிடைக்காததால் அடுத்து ஷூட்டிங் செல்லவில்லை. இப்படியிருக்கும் போது பாலாவுக்கும் விஷாலுக்கும் எப்படி மோதல் ஏற்பட்டிருக்கும்? என்கிறது விஷால் தரப்பு




# பையா



இன்டர்வியூவுக்காக நண்பர்களுடன் பெங்களூர் வருகிறார் கார்த்தி. அங்கு தமன்னாவை பார்த்து ஒரு தலையாக காதல் கொள்கிறார். நண்பரை அழைத்து வர, ரயில் நிலையத்துக்கு காரில் செல்கிறார் கார்த்தி. அப்போது அங்கு தவித்தபடி வருகிறார் தமன்னா. கார்த்தியை டிரைவர் என நினைத்து, ரயில் டிக்கெட் தவறிவிட்டதால் சென்னையில் விட முடியுமா ? எனக் கேட்கிறார் தமன்னாவின் உறவினர். தமன்னாவுக்காக ஓகே சொல்கிறார் கார்த்தி.

வழியில் பெற்றோல் போடுவதற்காக உறவினர் இறங்குகிறார். அந்தநேரம் பார்த்து , உறவினரிடமிருந்து காப்பாற்றி, தன்னை மும்பைக்கு அழைத்து செல்லும்படி தமன்னா கெஞ்சுகிறார். உடனே உறவினருக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு தமன்னாவுடன் புறப்படுகிறார் கார்த்தி. தமன்னாவை தேடி ஒரு ரவுடி கூட்டம் பின் தொடர்கிறது. அதேபோல முன் விரோதம் காரணமாக, கார்த்தியை துரத்துகிறது இன்னொரு ரவுடி கூட்டம். அவர்களிடமிருந்து இருவரும் எப்படி தப்புகின்றனர்? கார்த்தியும் தமன்னாவும் காதல் நிறைவேறியதா என்பது கிளைமாக்ஸ்.



பஸ்சிலிருந்து இறங்கும்போது எதிரில் வரும் தமன்னாவை கண்டதும் தன்னை மறந்த நிலையில் அவரது அழகில் சொக்கிப் போகிறார் கார்த்தி. தமன்னாவை பார்க்கும் ஆர்வத்தில் இன்டர்வியூவை தவறவிட்டு ஓடுவதும், நண்பரை அழைத்துச் செல்ல, ரயில் நிலையத்துக்கு வரும் கார்த்தி , அங்கு தமன்னாவை கண்டதும் நண்பரை விட்டு புறப்படுவதும் காதல் கலாட்டாக்கள். பெற்றோல் பங்கில் உறவினரிடமிருந்து தமன்னா எஸ்கேப் ஆகும் காட்சியில் சூடு பிடிக்கிறது. கார் போகும் வேகத்தில் காட்சிகளும் நகர்வது பிளஸ்.


முன்னால் போற கார் கதவுல லேசா திறந்திருக்கு. வேகமாக போங்க. சொல்லிடலாம்'' என தமன்னா சொல்லும்போது திக் திக் தொடங்கி விடுகிறது. காரணம், அந்தக் காரில்தான் தமன்னாவை தேடும் கும்பல் இருக்கிறது. திடீரென ஒரு கூட்டம் பின் துரத்த, ''இவங்க உன்னை துரத்தல. என்னை துரத்துறாங்க' என கார்த்தி சொல்லும்போது விறுவிறுப்பு. இந்த துரத்தல் விளையாட்டுக்கு இடையே கார்த்தியின் காதல் சில்மிஷங்கள், தமன்னாவின் குழந்தைத்தனமான செய்கைகள், லைட் ஹியூமர் என ஆங்காங்கே இயக்குநர் முத்திரைகள். முழுக்க பயணத்திலேயே காட்சிகள் நகராமல் பார்த்துக்கொண்டது படத்தின் சிறப்பு.

காதலில் தவிக்கும் கார்த்தி. ஆக்ஷன் காட்சிகளில் மிரட்டுகிறார். அழகான இராட்சசியாக வருகிறார் தமன்னா. மும்பை தாதாவான மிலிந்த சோமன் நடிப்பில் மிளிர்கிறார். ஜெகன் சிரிக்க வைக்கிறார். யுவன் சங்கர்ராஜா இசையில் நா.முத்துக்குமாரின் பாடல்கள் இதம். பின்னணி இசை காட்சிகளுடன் பயணிக்கிறது. மதியின் ஒளிப்பதிவு பளிச். சேசிங் காட்சிகளில் மிளிர்கிறது காதல், ஆக்ஷன் இரண்டையும் கலந்து ரசிகர்களை குஷியாக பயணிக்க வைக்கிறார் இயக்குநர் லிங்குசாமி.

மொத்தத்தில் ''பையா'' -'' காதல் + சடுகுடு'' !




# 92 இலட்சம் போச்சே! கவலையில் கலகல சந்தானம்!!



தமிழ் சினிமா காமெடியில் தனக்கென தனி பாதையை உருவாக்கி வெற்றி பெற்றிருப்பவர் நடிகர் சந்தானம். சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரைக்கு முன்னேறிய இவர்தான் இப்போது கோலிவுட்டின் பிஸி காமெடியன். ரசிகர்களை கலகலப்பூட்டும் சந்தானம் இப்போது கவலையில் இருக்கிறாராம். காரணம் வடிவேலுவை அழவைத்த அதே நில விவகாரம் தான்.

மக்களை சிரிக்கவைத்து சம்பாதித்த பணத்தில் வளசரவாக்கம் பகுதியில் நிலம் வாங்க முடிவு செய்த சந்தானம், அதற்காக ஒரு இடத்திற்கு ஒன்றரைக் கோடி ரூபாய் ரேட் பேசி முடித்திருக்கிறார். முன்பணமாக ரூ. 92 இலட்சம் கொடுத்த சந்தானம், நம்பிக்கையின் அடிப்படையில் கொடுத்த பணத்திற்கு கையெழுத்து கூட வாங்கவில்லையாம். மீதத் தொகையுடன் பதிவு செய்யப் போகும்போது நிலைமை தலைகீழாகியிருக்கிறது.

மூன்று கோடிக்கு வேறொருவர் நிலத்தை கேட்டதால், நில உரிமையாளர் சந்தானத்துக்கு நிலம் கிடையாது என்று கூறிவிட்டாரம். சரி... அப்போ நான் கொடுத்த முற்பணத் தொகையை யாவது திருப்பிக் கொடுங்கள் என சந்தானம் கேட்க, நிலம் விற்கும்போது பணத்தைக் கொடுக்கிறேன் என்று கூறி இழுத்தடிக்கிறாராம்.

இப்போது வளசரவாக்கம் பகுதியில் உள்ள முக்கிய பிரமுகர் உதவியுடன் பஞ்சாயத்து பேசி, கொடுத்த பணத்தை திருப்பிவாங்கும் முயற்சியில் இறங்கியிருக்கும் சந்தானம், அதற்காகவே பெரும் தொகையை செலவு செய்து கொண்டிருக்கிறாராம்.

# அசினுக்கு காவல்காரன் ஆன விஜய்!



விஜய்யின் 51 ஆவது படத்தின் இயக்குநர் சித்திக் என்பது உறுதியாகிவிட்டது. விஜய் நடிக்கும் இந்தப் படத்தின் பெயர் காவல்காரன். எம்.ஜி.ஆர்.பட டைட்டில்களை வைத்த எந்தப் படமும் ஓடியதில்லை என்ற சென்ட்டிமென்ட்டை முதன் முறையாக தகர்த்த படம் ஆயிரத்தில் ஒருவன் தான். அதற்கு முன்பு வந்த படங்கள் எதுவும் பெரிய வசூலை சந்தித்ததில்லை. தமிழில் பெரிய வசூல் இல்லையென்றாலும் தெலுங்கில் டப்பிங் செய்யப்பட்ட '' யுகானிக்கு ஒக்கடு'' என்ற ஆயிரத்தில் ஒருவன் பெரிய ஹிட்!

படத்தில் பணக்கார அசினுக்கு காவல்காரனாக வேலைக்கு சேரும் விஜய், எப்படி அசினை கவர்கிறார் என்பதுதான் கதை. ஆனால் படத்தில் வேறொரு பெண்ணை கரம் பிடிப்பாராம் விஜய். அந்த தம்பதிகளுக்கு ஒரு குழந்தையும் பிறப்பதாக போகிறது படம்.

க்ளைமாக்சில் பத்து வயது மகனுக்கு அப்பாவாகவும் நடிக்கிறாராம் விஜய். விஜய்யை கண்காணிக்கிற கரக்டரில் வடிவேலு. இவர்கள் போக ஒரு மிக முக்கிய கரக்டரில் நடிக்கிறார் ராஜ்கிரண். அசினின் அப்பா இவர்தானாம்! காவல்காரன் படத் தலைப்புக்காக சத்யா மூவிஸாருடன் பேசி அனுமதியும் வாங்கிவிட்டனராம். மலையாளத்தில் வெளியான பொடிகார்ட் படத்தின் தமிழாக்கம் தான் இந்த காவல்காரன் என்பது மற்றொரு தகவல்.

# சினிமாவை விட்டு விலகல் நடிகை பூஜா பரபரப்பு பேட்டி



இனி சினிமாக்களில் நடிக்கமாட்டேன். திருமணம் செய்து வாழ்க்கையில் இணையப்போகிறேன் என்று நடிகை பூஜா அறிவித்துள்ளார். ஜே.ஜே. படத்தின் மூலம் அறிமுகமாகி ஏராளமான தமிழ் ரசிகர்களின் கனவுக்கன்னியாக திகழ்பவர் நடிகை பூஜா. தம்பி, நான் கடவுள் உள்ளிட்ட படங்களில் நடித்திருக்கும் பூஜா இலங்கையைச் சேர்ந்தவர் என்று கூறப்பட்டாலும் அவரது சொந்த ஊர் கர்நாடக மாநிலம் சிருங்கேரி ஆகும்.

பூஜாவின் தந்தை கர்நாடகாவைச் சேர்ந்தவர். தாயார் சந்தியா இலங்கையைச் சேர்ந்தவர். இலங்கையில் தாத்தா -பாட்டி வசித்து வருவதால் பெரும்பாலான நாட்கள் பூஜா இலங்கையில் வசித்து வந்தார். ஒரு சில சிங்களப் படங்களிலும் நடித்திருக்கிறார்.

நான் கடவுள் படத்திற்கு பின்னர் அடுத்த படங்களில் கமிட் ஆகாமல் இருந்த பூஜா சினிமாவை விட்டு விலகுவதாக அதிரடியாக அறிவித்துள்ளார். அவரது இந்த அறிவிப்பு ரசிகர்களை பெரிதும் கவலைக்குள்ளாக்கி இருக்கிறது. இந்த திடீர் முடிவு குறித்து நடிகை பூஜா அளித்துள்ள பேட்டியில்,

2004 ஆம் ஆண்டு சினிமாவுக்கு வந்தேன். எனக்கு நிறைய பட வாய்ப்புகள் வந்தாலும் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளாமல் குறிப்பிட்ட படங்களில் மட்டுமே நடித்து வந்தேன். இந்த 6 வருடங்களில் 10 படங்களில் மட்டுமே நடித்திருக்கிறேன். தமிழில் கடைசியாக நடித்த நான் கடவுள் படம் எனக்கு நல்ல பெயரை பெற்றுத் தந்தது. இதற்காக எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சிங்களத்தில் நடித்து முடித்திருக்கும் கலந்ததனுனா ஜீவிதே படம் அடுத்த மாதம் திரைக்கு வரவிருக்கிறது. இதுதான் நான் நடித்த கடைசிப் படமாக இருக்கும். இனிமேல் சினிமாவில் நடிக்கப் போவதில்லை என்று முடிவு எடுத்திருக்கிறேன்.

நான் ஆரம்பத்தில் சினிமாவில் நடிக்க ஆசைப்பட்டபோது என் அப்பாவுக்கு அதில் விருப்பம் இல்லை. ஆனால் என் ஆசைக்கு குறுக்கே நிற்காமல் நடிப்பதற்கு அனுமதித்தார். சமீபகாலமாக அப்பாவை சந்திக்கும் உறவினர்கள் எல்லாரும் பூஜாவை இன்னும் எவ்வளவு நாளைக்கு நடிக்க வைக்கப் போகிறாய்? அவளுக்கு என்று ஒரு குடும்ப வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டாமா? என்று கேட்கிறார்கள். இதனால் நீ நடித்தது போதும் என அப்பாவும் அம்மாவும் என்னிடம் கேட்டுக் கொண்டனர். அவர்களின் மனதை நான் கஷ்டப்படுத்த விரும்பவில்லை. அதனால் சினிமாவை விட்டு விலக முடிவு எடுத்திருக்கிறேன்.


நான் திருமணம் செய்துகொண்டு குடும்பம் நடத்த வேண்டும் என்று அப்பாவும் அம்மாவும் விரும்புகிறார்கள். அவர்களின் ஆசையை நிறைவேற்றுவது ஒரு மகள் என்ற முறையில் என் கடமையாக நினைக்கிறேன். எப்போது என்பதை இன்னமும் முடிவு செய்யவில்லை. அது நடக்கும்போது நடக்கட்டும். எனக்கு வரப்போகிறவர் என்னிடம் அன்பாக இருந்தால் போதும். வருங்கால கணவர் குறித்து எனக்கு பெரிய கனவுகள் எதுவும் இல்லை. ஓரளவு எனக்குப் பொருத்தமாக இருந்தால் போதும்.

இலங்கையில் இருக்கும் எனது தாத்தாவுக்கு 95 வயதாகிறது. பாட்டிக்கு 90 வயது. கடைசிக் காலத்தில் அவர்கள் மீது அன்பை முழுமையாக செலுத்தப் போகிறேன். இலங்கையில் தங்கியிருந்து தாத்தா - பாட்டியை கவனித்துக் கொள்வதுதான் எனது இப்போதைய முழுநேர வேலை. இவ்வாறு நடிகை பூஜா கூறினார். நடிகை பூஜா இதுவரை நடித்துள்ள தமிழ் படங்கள்:-ஜேஜே, அட்டகாசம், உள்ளம் கேட்குமே, ஜித்தன் ,பட்டியல், தம்பி,தகப்பன்சாமி,பொறி, ஓரம் போ,நான் கடவுள்.

# மின் ஒழுக்கால் கடை தீப்பற்றியது; நாச்சிமார் கோயிலடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மின் ஒழுக்கு காரணமாக நாச்சிமார் கோயிலடியில் அமைந்துள்ள கடை ஒன்று தீப்பற்றி எரிந்துள்ளது.



கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள வேணுகா தொலைத் தொடர்பகம் என்ற கடையே இச்சம்பவத்தில் தீப்பற்றி எரிந்துள்ளது.

கடையின் உட்பகுதியில் இருந்து தீ மண்டலமாக கிளம்பிய வேளை அயலில் உள்ளவர்களால் யாழ். மாநகரசபை தீயணைப்பு படையினருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு படையினர் தீயை அணைத்ததுடன் பக்கத்தில் உள்ள கடைகளுக்கு தீ பரவாமல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

எனினும் இச்சம்பவத்தில் 9 இலட்சம் ரூபா பெறுமதியான கணனிகள் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (6-7)

## பயிற்சி வகுப்பு

உப அஞ்சல் அதிபர் போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்பு இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப 2.30 மணி தொடக்கம் 5 மணி வரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எதிரேயுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவில் நடைபெறவுள்ளது. (6)

# 301 சுயேட்சைக் குழுக்களின் கட்டுப்பணங்கள் அரசுடமை

(கொழும்பு)

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட 301 சுயேட்சைக் குழுக்களின் கட்டுப்பணங்கள் அரசுடமையாக்கப்பட்டுள்ளன.

அளிக்கப்பட்ட வாக்குகளில் ஐந்து சதவீதத்தைக்கூட பெறமுடியாமல் போனதன் காரணமாகவே சுயேட்சைக் குழுக்களின் கட்டுப்பணங்கள் அரசுடமையாக்கப்பட்டுள்ளதாக தேர்தல் செயலகத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சுயேட்சைக் குழுக்களின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களிடம் தலா 2 ஆயிரம் ரூபா கட்டுப்பணம் அறிவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் சர்வதேச தரத்துக்கு நிகரான தொழிற்பயிற்சி நெறிகள்

## கிங்ஸ்லி ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பா உட்பட ஏனைய நாடுகளில் காணப்படும் தொழில் வெற்றிடங்களுக்கு எமது நாட்டு தொழிலாளர்களை நிரப்பும் முகமாக அவர்களுக்கு பொருத்தமான தொழில் பயிற்சியை வழங்குவதே எமது பணியகத்தின் மற்றுமொரு நோக்கமாகும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் சட்டத்தரணி கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

மேற்படி பணியகம் நாடளாவிய ரீதியாக புதிய கிளைகளையும் பயிற்சி நிலையங்களையும் திறந்து வருவது தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளில் தொழில் புரிந்து விட்டு நாடு திரும்பும் எம்மவர்கள் எமது பணியகத்தில் பதிவு செய்து கொள்வதுடன் அவர்களுக்கு மீண்டும் தொழில்வாய்ப்பு வழங்கி வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பது போன்ற திட்டங்கள் எம்மால் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

உலகின் பெரும்பாலான நாடுகளில் உயர்ந்த ஊதியத்துடனான தொழில் வெற்றிடங்கள் காணப்படுவதனால் சர்வதேச தரத்துக்கு நிகரான தொழிற்பயிற்சியை வழங்கும் நோக்கில் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் எமது பணியகத்தினால் தொழில் பயிற்சி நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டு வருகின்றன.

விசேடமாக வெளிநாடுகளில் தொழில் புரிய எமது பணியகத்தில் பதிவு செய்து கொள்ளும் இளைஞர், யுவதிகளுக்கு அவர்கள் தொழில் புரியச் செல்லும் நாட்டினது மொழியினை கற்றுக் கொள்வதற்கான பயிற்சி நெறி கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன் அதில் தேறுபவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்பதனை கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

எமது பணியகத்தில் பதிவு செய்து கொள்பவர்கள் வெளிநாட்டு மொழியறிவு தொழிற் பயிற்சி, அந்நாட்டு சட்டதிட்டங்கள் போன்ற அறிவினை முறையாக பெற்றுக் கொள்வதன் மூலம் இவர்கள் அந்நாடுகளில் தொழில் புரியும் போது அங்கு ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகளை தவிர்த்துக் கொள்வதற்கும் ஆபத்துக்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கும் வழி கிட்டுகின்றது. இது ஒரு தொழிற் பாதுகாப்பும் கூட என்றார். (6)

# இம்முறை பெருமளவான மக்கள் வாக்களிப்பில் ஆர்வம் காட்டவில்லை

## நிமல்கா பெர்னாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தொடர்ச்சியாகவே இடம்பெற்று வந்த ஜனநாயகம் பின்பற்றப்படாமை, மக்களின் தகவல் அறிந்து கொள்ளும் உரிமை மீறப்பட்டமை, ஊடக அடக்குமுறை, மக்களது வாழ்வாதாரம் உரிய முறையில் பேணப்படாமை போன்ற காரணங்களால் அவர்களுக்கு தேர்தலில் வாக்களிக்கும் ஆர்வம் குறைவடைந்திருப்பதை புலப்படுத்துவதாக சுதந்திரத்திற்கான அரங்கு அமைப்பின் சிரேஷ்ட பிரதிநிதி சட்டத்தரணி நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்தார்.

இடம்பெற்று முடிந்த பொதுத் தேர்தல் மற்றும் அதன் பெறுபேறுகள் தொடர்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முன்னர் நிகழ்ந்திராத வகையில் மிகக்குறைந்தளவுக்கு மக்கள் வாக்களித்திருப்பதை நடந்து முடிந்த பொதுத்தேர்தல் பெறுபேறுகள் எடுத்துக் காட்டுகின்றன.

மக்களுக்கு இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை அற்றுப்போய் விட்டதனாலும் தேர்தலில் ஆர்வம் குன்றிப் போனதாலும் பெருவாரியான மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

அரசாங்கம் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணி பெற்றுக் கொண்டதை விட அதிகப்படியான வாக்குகளைப் பெற்றிருந்தும் கூட அது எதிர்பார்த்த அந்த மாபெரும் மக்கள் ஆணை அரசுக்கு கேள்விக்குறியாகி விட்டது.

அரசாங்கத்தின் முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்தவர்கள் சிலரும் தோல்வியைத் தழுவியுள்ளமையை தேர்தல் பெறுபேறுகள் நன்கு புலப்படுத்துகின்றன.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிழக்கு ஆகிய பிரதேசங்களில் வாக்காளர்கள் நீதியானதும் சுதந்திரமானதுமான முறையில் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை. அடக்குமுறைக்கு மத்தியிலேயே அவர்கள் வாக்களித்துள்ளார்கள்.

அதுபோல நலன்புரி நிலையங்களில் வசித்து வந்தோரும் நீதியான முறையில் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை.

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் எத்தனை முறை தேர்தலில் வெற்றி பெற்றாலும் அது இந்நாட்டில் வாழும் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒருபோதுமே தீர்வினை பெற்றுத்தராது என்பதை அதன் கடந்த கால செயற்பாடுகளிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

சுதந்திரத்திற்கான அரங்கு எனும் எமது அமைப்பு ஸ்தாபிக்கப்பட்ட நாள் தொட்டு இற்றை வரைக்கும் இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படல் வேண்டும்.

தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கும் உரிய பரிகாரம் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும். பெரும்பான்மை மக்கள் அனுபவிக்கும் அதே உரிமைகளை தமிழர்களும் பெற்றுக் கொள்ளக்கூடிய சூழல் உருவாக வேண்டும் என்பவற்றை வலியுறுத்தி குரல் கொடுத்து வருகின்றோம்.

தேர்தல்கள் என்று வரும்போது சிறுபான்மை அரசியல் கட்சிகள் பெரும்பான்மை கட்சிகளுக்கு சோரம் போகாமலும் அவற்றுடன் கூட்டணி சேராமலும் தனித்து நின்று போட்டியிட்டு தமது தனித்துவங்களை வெளிப்படுத்தக்கூடிய அளவுக்கு எமது நாட்டில் ஆரோக்கியமான மாற்றங்கள் உருவாக வேண்டும் என்பது எனது கருத்தாகும் என்றார். (6)

# இலங்கை கடற்படையினருக்கு இந்தியா பயிற்சிகள் வழங்கத்திட்டம்

(கொழும்பு)

இலங்கை கடற்படையினருக்கு இந்தியா பயிற்சிகளை வழங்கவுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கப்பல்களில் கடமையில் ஈடுபடும் போது மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பணிகள் மற்றும் அவசர நடவடிக்கைகள் குறித்து பயிற்சி அளிக்கடப்படவுள்ளது.

இந்திய கப்பலான ஐ.என்.எஸ். இல் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கப்பல் திருகோணமலைக்கு கிழக்கே உள்ள கடற்பரப்பில் தரித்து நிற்பதாகக் குறிப்பிடப்படுகிறது. (6)

# தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாது போனமை கவலைதரும் விடயம்

## எம். சச்சிதானந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

நம்பிக்கை வைத்து வாக்களித்த பதுளை மாவட்ட தமிழ் மக்களுக்கு மனமுவந்து நன்றி தெரிவிக்கும் அதேவேளை தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாது போனமை கவலை தரும் விடயம் என்று ஐக்கிய தேசிய முன்னணியில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்டவரான எம். சச்சிதானந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட சிறுபான்மைச் சமூகம் மேலும் ஏமாற்றப்படுவதற்கு இந்தத் தேர்தல் வழிவகுத்து விட்டது என்றே கூற வேண்டியுள்ளது.

எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதெனில் எமது சமூகத்திலிருந்தே பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். சிறுபான்மை பிரதிநிதித்துவம் இல்லாது போனமைக்கு வாக்காளர்களும் பொறுப்புக்கூற வேண்டியவர்களாகவே இருக்கின்றனர்.

அத்துடன் சிறுபான்மைப் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சதி முயற்சிகளை முறியடிப்பதற்கு இனிவரும் காலங்களில் நாம் எம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டியது கட்டாயமானதாகும்.

நான் பாராளுமன்றத்துக்கு செல்லாவிட்டாலும் கூட எனது சேவையில் எந்த குறைபாடுகளும் இருக்கப்போவதில்லை என்றார். (6)

# கிர்கிஸ்தானில் ஏற்பட்ட கலவரத்தையடுத்து கொள்ளைக் கும்பலின் அட்டூழியம் அதிகரிப்பு

## மக்கள் பெரும் பீதியில்

(பிஷ்கெக்)

கிர்கிஸ்தானில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்ததை அடுத்து கொள்ளை கும்பலின் அட்டூழியம் அதிகரித்துள்ளது. இதனால் அவர்களை கட்டுப்படுத்துவதற்காக சிறப்பு கண்காணிப்பு குழுவை புதிய அரசு நியமித்துள்ளது.

கிர்கிஸ்தானில் எதிர்க்கட்சிகள் நடத்திய பெரும் கிளர்ச்சி காரணமாக அதிபராக இருந்த குர்மான்பெர்க் பாகியோவ் தப்பி ஓடிவிட்டார்.

இந்த கிளர்ச்சியின் போது ஏற்பட்ட கலவரத்தில் 65 க்கும் மேற்பட்டோர் பலியாயினர். எதிர்க்கட்சி தலைவராக இருந்த ரோஜா ஒடுன்பயெவா இடைக்கால அரசின் தலைவராக செயல்பட்டு வருகிறார்.

திடீரென ஏற்பட்ட கலவரத்தை கொள்ளை கும்பல்கள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி வருகின்றன.

தலைநகர் பிஷ்கெக்கை குறிவைத்து செயல்படும் இந்த கொள்ளை கும்பல் அங்குள்ள கடைகள், அலுவலகங்களுக்குள் புகுந்து பொருட்கள் மற்றும் பணத்தை கொள்ளையடித்துச் செல்கின்றனர்.

இந்த பிரச்சினையை தவிர்ப்பதற்காக சிறப்பு கண்காணிப்பு குழுவை புதிய அரசு நியமித்துள்ளது.

இந்த குழுவில் உள்ள துப்பாக்கி ஏந்திய இராணுவ வீரர்கள் முக்கிய வீதிகளில் ரோந்து சுற்றி வருகின்றனர். இருந்தாலும் பிஷ்கெக் மக்களிடையே இன்னும் கொள்ளை கும்பல் பீதி குறையவில்லை.

இதற்கிடையே இடைக்கால அரசின் துணை தலைவர் அல்மாஸ்பெக் அடம்பயெவ், தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்தும் நிதி உதவி பெறுவது குறித்தும் பேச்சு நடத்துவதற்காக நேற்று முன்தினம். ரஷ்யாவுக்கு புறப்பட்டுச் சென்றார்.

கிர்கிஸ்தான் நிலவரம் குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் கிரவுலி கூறுகையில்,

தற்போதுள்ள சூழ்நிலையில் கிர்கிஸ்தானில் அமைதியான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பது தான் அமெரிக்காவின் விருப்பம். கிர்கிஸ்தானுடன் நல்ல உறவை வைத்துக் கொள்ளவே விரும்புகின்றோம் என்றார். (6)

## ஆப்கானிஸ்தானில்

### நேட்டோ விமானம் நொறுங்கி விழுந்து 4 பேர் பலி

(கந்தகார்)


ஆப்கானிஸ்தானின் ஷாபுல் மாகாணத்தில் நேற்று முன்தினம் நேட்டோ படையினர் சென்ற விமானம் ஒன்றுநொறுங்கி விழுந்தது. இதில் பயணம் செய்த 4 பேரும் சம்பவ இடத்திலேயே பலியானார்கள்.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த விமானம் நொறுங்கி விழுந்ததாக ஷாபுல் மாகாண செய்தி தொடர்பாளர் முகமது ஷன் ரசூல்யார் தெரிவித்தார். விபத்துக்குள்ளானது எந்த வகை விமானம் என்பது உடனடியாக தெரிய வரவில்லை. (6)

# பாகிஸ்தானில் தாக்குதல்: 27 பயங்கரவாதிகள் பலி

(பெஷாவர்)

பாகிஸ்தானின் பழங்குடியின பகுதியில் இரு வேறு இடங்களில் நிகழ்ந்த தாக்குதல்களில் தலிபான் ஆதரவு பயங்கரவாதிகள் 27 பேரைபாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றனர்.




இதுகுறித்து பாதுகாப்பு அதிகாரிகள் கூறியதாவது,


பாகிஸ்தானின் ஒரக்சாய் பழங்குடியின பகுதியில் பைசாட் என்ற இடத்தில் உள்ள சோதனைச் சாவடியை பயங்கரவாதிகள் தாக்கினர்.

இதைத் தொடர்ந்து பாதுகாப்பு படையினர் மற்றும் பயங்கரவாதிகள் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 18 பயங்கர வாதிகள் கொல்லப்பட்டனர்.

காயமடைந்த 4 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். இதில் பாதுகாப்பு படையைச் சேர்ந்த மூன்று வீரர்களும் காயமடைந்தனர். (6)

# பிரேசில் நிலச்சரிவு இடிபாடுகளுக்குள் சிக்கிய 20 பேர் உயிருடன் மீட்பு

(ரியோ டினெஜிரோ)



பிரேசில் நாட்டின் இரண்டாவது மிகப் பெரிய நகரான ரியோ டிஜெனிரோவில் கடந்த இரண்டு வாரங்களாக 40 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பலத்த மழை பெய்தது.

இதனால் பல இடங்களில் வெள்ளப் பெருக்கும், 200 க்கும்மேற்பட்ட இடங்களில்பயங்கர நிலச் சரிவும் ஏற்பட்டது.

இதில் 168 பேர் பலியானார்கள். இந்த நிலையில் ரியோ டிஜெனிரோ அருகில் உள்ள பும்பா மலைப்பகுதியில் மீண்டும் நிலச்சரிவு ஏற்பட்டது.

அங்கு உடனடியாக மீட்பு பணிகள் நடந்தன. அப்போது 32 சடலங்கள் கைப்பற்றப்பட்டன.

இதனால் நிலச்சரிவினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 200 ஆக உயர்ந்தது. மேலும் 50 வீடுகளில் இடிபாடுகளுக்கு சிக்கி உயிருக்கு போராடிய 21 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர்.

மீட்பு பணி தொடர்ந்து நடந்து வருவதால் பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (6)



செக் குடியரசு நாட்டிற்கு சென்றிருந்த அமெரிக்க அதிபர் ஒபாமாவை (இடது) அந்நாட்டு அதிபர் வக்லவ்கிளாஸ் பராகு அதிபர் மாளிகையில் வரவேற்றார்.

# மார்புப்பகுதி ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் வெற்றிகரமாக பிரிப்பு

பிரித்தானியாவில் மார்புப் பகுதி ஒட்டிய நிலையில் பிறந்த இரட்டை ஆண் குழந்தைகளை 14 மணி நேரம் போராடி மருத்துவர்கள் வெற்றிகரமாக வேறு பிரித்துள்ளனர்.



அயர்லாந்தின் ஈஸ்ட் கோர்க் நகரைச் சேர்ந்த 4 மாத வயதான ஹுசைன் மற்றும் ஹஸன் பென் ஹாபாப் ஆகியோரே லண்டனிலிலுள்ள கிரேட் ஓர்மொன்ட் வீதி மருத்துவமனையில் வேறு பிரிக்கப்பட்டுள்ளனர்.

இந்த இரட்டையர்களை வேறு பிரிப்பதற்கான அறுவைச் சிகிச்சையில் நான்கு சத்திர சிகிச்சை நிபுணர்கள் உட்பட 20 மருத்துவ உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

கடந்த டிசம்பர் மாதம் லண்டனிலுள்ள பல்கலைக் கழக கல்லூரி மருத்துவமனையில் பிறந்த மேற்படி இரட்டையர்களை வேறு பிரிக்கத் தவறும் பட்சத்தில், அவர்கள் உயிர் வாழ்வது சாத்தியமில்லை என மருத்துவர்களால் எதிர்வு கூறப்பட்டதையடுத்தே மேற்படி அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த அறுவைச் சிகிச்சை தொடர்பில் இரட்டையர்களின் தாயான அன்கி மற்றும் தந்தையான அஸெடின் ஆகியோர் விபரிக்கையில்,

எங்களது சின்னஞ்சிறு குழந்தைகள் தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கான போராட்டத்தில் வெற்றி பெற்றுள்ளார்கள் என்று தெரிவித்தனர். (6)

# ராஜினாமா செய்து விட்டு நாட்டை விட்டு வெளியேற கிர்கிஸ்தான் அதிபருக்கு உத்தரவு

## இடைக்கால அரசு அறிவிப்பு

(பிஷ்கெக்)

ரஷ்யாவில் இருந்து பிரிந்து சென்ற நாடுகளில் ஒன்றான கிர்கிஸ்தானில் பாகி யேவ் என்பவர் அதிபராக இருந்தார். கடந்த 2006 ஆம் ஆண்டு ஆளுங்கட்சிக்கு எதிராக போராட்டம் நடத்தி ஆட்சியைப் பிடித்தார். இவரது ஆட்சியில் ஊழல் அதிகரித்தது. விலைவாசி உயர்ந்தது.

எனவே எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தினர். பின்னர் அதிபர் மாளிகையை கைப்பற்றினர். இதைத் தொடர்ந்து கலவரம் மூண்டது.

இதற்கிடையே அதிபர் மாளிகையில் இருந்து வெளியேறி பாகியேவ் தப்பி ஓடி விட்டார். உட்துறை மந்திரி மோஸ்டோ முசாவை கலவரக்காரர்கள் அடித்துக் கொன்றனர். இந்த கலவரத்தில் 95 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையே கிர்கிஸ்தான் ஆட்சியை கைப்பற்றி விட்டதாக போராட்டத்தை தலைமை ஏற்று நடத்திய எதிர்க்கட்சி தலைவர் எதுன் பயாலே அறிவித்தார்.

6 மாதத்துக்கு தங்களது இடைக்கால ஆட்சி தொடரும். அதன்பிறகு புதிய அரசியல் சட்டங்களை உருவாக்கி ஆட்சி அமைப்போம் என்று அறிவித்தார்.

மேலும் பாராளுமன்றத்தை கலைத்து விட்டதாகவும் இடைக்கால அதிபராக ரோசா ஒடுனபயாவே இருப்பார் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தலைமறைவாக இருக்கும் அதிபர் பாகியேவ் ராஜினாமா செய்து விட்டு கிர்கிஸ்தானை விட்டு வெளியேற வேண்டும் என இடைக்கால அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து இடைக்கால அரசின் அதிபர் ரோசா ஒடுனபயாவே பிஷ்கைக்கில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது,

நாட்டை விட்டு பத்திரமாக வெளியேற அவருக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் தருகிறோம். அதற்கு முன்னதாக அவர் தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது இராணுவம் துப்பாக்கி சூடு நடத்தி பலரை கொன்று குவித்துள்ளது.

எனவே இராணுவ நடவடிக்கை குறித்து விசாரணை நடத்தப்படும் என்றார்.


முன்னதாக கலவரத்தில் உயிரிழந்தவர்கள் உடலுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

இதற்கிடையே பதவியில் இருந்து விரட்டப்பட்ட அதிபர் பாகியேவ் ஜலாலா பாத் பகுதியில் தலைமறைவாக உள்ளார். ஒரு செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது,

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்த நான் உத்தரவிடவில்லை. என் கரங்கள் இரத்தக்கறை படிந்தவை அல்ல.

சட்டப்படி நான் இன்னும் அதிபராகத்தான் இருக்கிறேன். பிஷ்கெக் நகருக்கு நான் திரும்பினால் அங்கு எனக்கு பாதுகாப்பு இல்லை. என்னை கொன்று விடுவார்கள் என்று தெரிவித்தார். (6)

# விண்வெளியை சுத்தப்படுத்தும் செயற்கைக்கோள்




அமெரிக்கா , ரஷ்யா , இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் ஆய்வுப் பணிக்காக செயற்கைக் கோள்கள் மற்றும் ரொக்கெட்டுக்களை விண்வெளிக்கு அனுப்புகின்றன. தங்களது ஆயுட்காலம் முடிந்ததும் இந்தச் செயற்கைக் கோள்கள் செயல் இழந்து குப்பையாகி விடுகின்றன. சில செயற்கைக்கோள்கள் உடைந்து சிதறித் துண்டு துண்டாகவும் ஆகின்றன. இவை விண்வெளிக் குப்பைகள் ஆக சுற்றி வருகின்றன.

கடந்த 50 ஆண்டுகளில் மட்டும் அனுப்பப்பட்ட செயற்கைக் கோள்கள் மூலம் சுமார் 5 ஆயிரத்து 500 தொன் எடையுள்ள குப்பைகள் விண்வெளியில் சேர்ந்துள்ளன. இந்தக் குப்பைகளால் ஏற்கனவே விண்வெளியில் சுற்றிக் கொண்டு இருக்கும் மற்றும் இனி அனுப்ப இருக்கும் செயற்கைக் கோள்கள் போன்றவற்றுக்கும் ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது. டெலிவிஷன் ஒளி பரப்பு மற்றும் தகவல் தொடர்புகள் பாதிக்கும் அபாயமும் இருக்கிறது.

இந்தப்பிரச்சினையை தீர்க்க இங்கிலாந்து விஞ்ஞானிகள் புதிய திட்டம் ஒன்றை உருவாக்கி உள்ளனர். இதன்படி மிகச் சிறிய நானோ செயற்கைக்கோள்களை தயாரித்து அவற்றை அழிக்கப் போகிறார்கள். இந்தக் குப்பைகளை சேகரிக்கும் வகையில் இந்த நானோ செயற்கைக் கோளில் காந்தவலை ஒன்றும் இணைக்கப்படும்.

இது விண்வெளியில் சுற்றிக்கொண்டிருக்கும் குப்பைகளை கவர்ந்திழுக்கும். பின்னர் இவற்றை பூமியின் மேற்பரப்புக்கு இழுத்து வரும்.

அப்போது இந்தக் குப்பைகளுடன் சேர்ந்து நானோ செயற்கைக் கோளும் எரிந்து சாம்பலாகி விடும். அடுத்த ஆண்டு இதற்கான ஆய்வுப் பணிகள் தொடங்குகின்றது.

## பணம் காய்க்கும் மரம்...



பணம் காய்க்கும் மரம் பார்த்திருக்கிறீர் களா?

மரங்கள் காய்த்து குலுங்கி வருமானம் தருவது இயற்கை. மரங்கள் மூலமாக மின்சாரமும், பெற்றோலும் தயாரித்து விற்கமுடிந்தால்... அது விஞ்ஞான அதிசயம்.


ஆம், அதை சாத்தியப்படுத்தியிருக்கிறார்கள் சீன விஞ்ஞானிகள். இவர்கள் அரச இலை போன்ற தோற்றமுடைய செயற்கை இலையை உருவாக்கி இருக்கிறார்கள். இந்த இலைகள் சூரிய ஒளியை ஈர்த்து பச்சையம் தயாரிக்காது. மாறாக சூரிய ஒளியை மின் ஆற்றலாக மாற்றி சேமிக்கிறது. அதேபோல வேர்கள் உறிஞ்சும் தண்ணீரை ஹைட்ரஜன் எரிபொருளாக மாற்றிவிடுகிறது. இயற்கையான ஒளிச் சேர்க்கையிலும் பங்கேற்கிறது.

எதிர்காலத்தில் ஏற்படும் மின்தேவை மற்றும் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்யும் சிறந்த வழியாக இந்த இலைகள் அமையும் என்று தெரிகிறது.

இந்த மாற்றங்களை ஏற்படுத்தி செடிகள், மரங்களில் இலைகளை வளர்க்கும்போது, நீங்கள் வளர்க்கும் மரம், ' பணம் காய்ச்சி' மரம்தானே!




# கமராவின் அறிமுகம்



## முதல் முதலாக!

பொதுவாக நம் வாழ்க்கையில் நடந்த பல நிகழ்ச்சிகளை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்து அசைபோட உதவுபவை புகைப்படங்களே. புகைப்பட அல்பங்களைப் பார்க்கும்போது நமக்கு ஏற்படும் உணர்வுகளே அலாதிதான். இந்த முறை நாம் புகைப்படக்கலை எப்படி வளர்ந்தது என்று பார்க்கலாம்.

முதல் முதலாக பிரான்சை சேர்ந்த ஜோசப் நைப்ஸ் உலகின் முதல் போட்டோகிராம்- ஐ 1826 இல் உருவாக்கினார். அது "ஹெலியோகிராப்" என்று அழைக்கப்பட்டது.

1835 இல் இங்கிலாந்தைச் சேர்ந்த வில்லியம் பாக்ஸ் டால்போட் என்பவர் முதல் முதலாக போட்டோகிராபிக் நெகட்டிவ் தயாரித்தார்.

பிரான்சின் லூயிஸ் டாக்யுர்ரே 1837 இல் முதல் முதலாக டாக்யுர்ரோடைப் - ஐ தயாரித்தார். இதற்கான காப்புரிமத்தை 1839 இல் பெற்றார்.

டால்போட் முதல் முதலாக 1841 இல் நெகட்டிவ் மற்றும் பொஸிட்டிவ்களுக்கான காப்புரிமம் பெற்றார்.

முதல்முதலாக இங்கிலாந்தின் ஃப்ரெட்ரிக் ஸ்காட் ஆர்ச்சர் 1851 இல் கொல்லோடியன் வெட் பிளேட் ப்ராசஸ்சை (ஈரத் தகடு முறை) அறிமுகப்படுத்தினார். இதே ஆண்டில் டால்போட் முதல் முதலாக ஒளியைப் (flash) பிரதிபலித்து போட்டோ எடுத்தார்.

1861 இல் முதல்முதலாக இங்கிலாந்தின் தாமஸ் சுட்டன் மற்றும் ஸ்கொட்லாந்தின் ஜேம்ஸ் க்ளார்க் மாக்ஸ்வெல ஆகியோர் முதல் முதலாக வண்ணப் புகைப்படத்தினை எடுத் தார்கள்.

முதல் முதலாக இங்கிலாந்தின் ரிச்சர்ட் மாட்டோக்ஸ் 1871 இல் வணிக ரீதியாக , ட்ரை பிளேட் ப்ராசஸ் (உலர் தகடு) முறையை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தினார். 1888 இல் முதல் முதலாக அமெரிக்காவின் ''ஈஸ்ட் மேன் ட்ரை பிளேட் கோ" நிறுவனம் " நம்பர் 1 கோடாக் கமரா " வைத் தயாரித்தது. இதில் முதல் முதலாக புகைப்படச் சுருள் பயன்படுத்தப்பட்டது. முதல் முதலாக ஈஸ்ட்மேன் ட்ரை பிளேட் கோ ,வணிக ரீதியான செல்லுலாய்ட் ஃபிலிம் ரோலைப் பயன்படுத்தியது.

1900 இல் முதல் முதலாக ஈஸ்ட்மேன் கொடாக் (ஈஸ்ட்மேன் ட்ரை பிளேட் கோ என்று முன்புஇருந்தது) கொடாக் பிரௌனி கமராவை அறிமுகப்படுத்தியது.

ஒரு டொலர் கமரா அதிசயம் ஆனால் உண்மை... என்ற ரீதியில் விளம்பரம் செய்தார்கள்.

1904 இல் லூமியர் சகோதரர்கள் (சினிமாவைக் அறிமுகப்படுத்தியவர்கள் ) முதல் முதலாக வன் ஷொட் பிலிம் முக்கான காப்புரிமத்தைப் பெற்றார்கள். இது ஓட்டோக்ரோம் என்றழைக்கப்பட்டது.

ஹங்கேரியைச் சேர்ந்த அனடோல் மார்கோ ஜோசப் முதல் முதலாக 1924 இல் முதல் கலர் பிலிம் ரோலைக் கண்டுபிடித்து ஜேர்மனியில் அறிமுகம் செய்தார்.

1932 இல் முதல் முதலாக அமெரிக்காவின் லியோபோல்ட் டி மென்னெஸ் மற்றும் லியோபோல்ட் கோடோவ்ஸ்கி ஆகியோர் வணிக ரீதியான கலர் பிலிமை அறிமுகப்படுத்தினர். இதற்கான காப்புரிமம் 1936 இல் கிடைத்தது.

அமெரிக்காவின் போலோராய்ட் நிறுவனம் 1948 இல் முதல் முதலாக போலோராய்ட் 95 எனும் இன்ஸ்டன்ட் கமராவை அறிமுகப்படுத்தியது.


இதை அந்நிறுவனத் தின் உரிமையாளர் எட்வின் எச் லேண்ட் அறிமுகப்படுத்தினார்.

பெல்ஜியத்தைச் சேர்ந்த ஜீன் டிவூட்டெர்ஸ் முதல் முதலாக தண்ணீருக்கு அடியில் பயன்படுத்தும் கமராவை அறிமுகப்படுத்தினார்.

1963 இல் போலோராய்ட் நிறுவனம் முதல் முதலாக இன்ஸ்டன்ட் கலர் பிலிமை அறிமுகப்படுத்தியது.




# பேசும் மாத்திரை




"இந்த மாத்திரையை டாக்டர் எப்போ சாப்பிடச் சொன்னார்? ச்சே மறந்து போச்சே" இப்படிச் சொல்லும் நோயாளிகள் பலர் இருக்கிறார்கள். மாத்திரையை சாப்பிட மறப்பவர்களும் இருக்கிறார்கள்.

இதுபோல் வேளை மாற்றி மாத்திரை சாப்பிடுவதாலும், மாத்திரைகளை மாற்றி சாப்பிட்டு விடுவதாலும் பல ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. வியாதிகள் குணமாகாது, புதிய பாதிப்பு ஏற்படுவது, கூடுதல் செலவு, டாக்டர்களுக்கும் தொல்லை... என பாதிப்புக்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

இந்த சிக்கலைத் தடுக்க புளோரிடா பல்கலைக்கழக மருத்துவக் குழு புதிய வழியைக் கண்டுபிடித்துள்ளது. அதுதான் பேசும் மாத்திரை.


இந்த மாத்திரையை நோயாளி சாப்பிடுவதற்காக வாய் அருகே கொண்டு சென்றால்," என்னை இப்போது சாப்பிடக் கூடாது.

நான் இரவு சாப்பிடவேண்டிய மாத்திரை " என்று கூறிவிடும். இதற்காக விசேடமாக இந்த மாத்திரை வடிவமைக்கப்பட்டுள்ளது. இரு அடுக்காய் இருக்கும் மாத்திரையில் மெல்லிய அண்டனா இருக்கும். (இது செரித்துவிடும் தன்மை கொண்டதுதான். எனவே கவலைவேண்டாம்).

மாத்திரையுடன் வழங் கப்படும் மற்றொரு கருவியில் மாத்திரை பற்றிய பதிவுகள் இருக்கும். வேளை மாற்றி சாப்பிட்டால் எச்சரிக்கும்.

இதனால் சரியான நேரத்தில், சரியான மாத்திரை சாப்பிட்டு எளிதில் நலமடையலாம். மாத்திரைக்கான கருவியை செல் போன் மற்றும் கணனியுடன் இணைக்கும் முயற்சிகள் நடந்து வருகிறது.

# 2009-ல் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 3.5 வீதம்; 2016-ல் தலாவருமானம் 4 ஆயிரம் டொலராகும்-கப்ரால்



(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் 2009 ஆம் ஆண்டில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்தபோதிலும் 3.5 சதவீத வளர்ச்சியை கண்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற 2009ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை வெளியிடும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதேவேளை, ஆண்டறிக்கையின் முதலாவது பிரதியை நிதியமைச்சரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவுக்கு மத்திய வங்கி ஆளுநர் கப்ரால் வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் நிதி திட்டமிடல் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, நிதி அமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.



மத்திய வங்கியின் ஆளுநர் இங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

கடந்த நிதியாண்டின் முற்பகுதி மிகவும் சவால்மிக்கதாக அமைந்தது. இறுதிக் கட்ட யுத்தம் இந்த நிதியாண்டின் முதற் காலாண்டிலேயே இடம்பெற்றது. மறுபுறத்தில் சர்வதேச நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, மசகு எண்ணெய் மற்றும் பொருட்களின் விலை அதிகரிப்பு போன்ற விடயங்களும் 2009 ஏப்ரல் 01 முதல் 2010 மார்ச் 31 வரையிலான பொருளாதாரச் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க அழுத்தத்தினை ஏற்படுத்தியது.

இவ்வாறான ஒரு பின்னணியிலேயே நாட்டின் பொருளாதாரம் 3.5சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது என்பது முக்கிய விடயமாகும். இதற்கு ஜனாதிபதி உட்பட பொருளாதாரத்துறையில் செயலாற்றுகின்ற அனைவரும் முக்கிய பங்களிப்பினை வழங்கியுள்ளனர்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய மத்திய வங்கியின் ஆளுநர்,

தற்போது 2 ஆயிரத்து 53 அமெரிக்க டொலராகக் காணப்படுகின்ற தனிநபர் வருமானத்தை 2013இல் 3000 டொலராகவும் 2016 இல் 4 ஆயிரம் டொலராகவும் அதிகரிக்கச் செய்யும் வகையிலான திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் என்று கூறினார்.

உலக நாடுகளில் 2008ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் ஏற்பட்டிருந்த அசாதாரண பொருளாதார நிலை கடந்த நிதியாண்டிலும் தொடர்ந்திருந்ததால் உலகளவில் பல நாடுகளின் சந்தைகள் வீழ்ச்சி அடைந்தன.

இதன் தாக்கம் உள்நாட்டுப் பொருளாதாரத்தையும் பாதித்தது. இதனால் அரச வருமானம் குறைவடைந்த அதேநேரம் பாதுகாப்பு , வட்டிக் கொடுப்பனவு, சம்பளங்கள் போன்றவற்றுக்கான செலவுகளும், மீள் குடியேற்றம் தொடர்பான ஒதுக்கங்களும் அதிகரித்தன.

இந்நிலையிலிருந்து 2ஆம் காலாண்டில் பொருளாதாரத்தை பழைய நிலைக்குக் கொண்டுவர முடிந்தது.

இன்றைய சூழலில் காணப்படும் வாய்ப்புகள்ளைப் பயன்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தை விரைவாக வளர்ச்சி காணச் செய்ய வேண்டும்எனவும்அவர்மேலும்தெரிவித்தார்.

விவசாய ,உணவு உற்பத்தி ,மீன்பிடி, ஆபரணக்கைத்தொழில்,



ஆடைக்கைத்தொழில், சுற்றுலா, உயர் கல்வி மற்றும் ஐ.ரி.,பி.பி.ஓ போன்ற பில்லியன் டொலர் கைத்தொழில்களை ஊக்குவிக்க வேண்டும்எனவும்அவர் மேலும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.05 | 114.68 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 171.53 | 175.07 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 149.89 | 153.40 |
| சுவிஸ் பிராங் | 104.54 | 107.11 |
| கனேடிய டொலர் | 111.77 | 114.61 |
| அவுஸ்திரேலிய டொலர் | 104.24 | 107.03 |
| சிங்கப்பூர் டொலர் | 80.62 | 82.43 |
| ஜப்பான் யென் | 1.20 | 1.23 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.56 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.97 | |

## மக்கள் வங்கியின் இலாபம் 22.7 % அதிகரிப்பு

PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE


மக்கள் வங்கி 2009ஆம் நிதியாண்டில் வரிக்குப்பின்னான இலாபமாக 3.3 பில்லியன் ரூபாயைப் பதிவு செய்துள்ளது.இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 22.7சதவீத அதிகரிப்பாகும் என மக்கள் வங்கியின் தலைமை நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான பி.வி.பத்திரண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்க வங்கியான மக்கள் வங்கி,கடந்த 9 வருடங்களாக இலாபத்தில் அதிகரிப்பைக் காட்டுகின்றது. 2009 ஆண்டில் வரிக்கு முன் இலாபமாக 6.1 பில்லியன் ரூபாயை பதிவு செய்துள்ளதாகவும் 2014ஆம் ஆண்டளவில் இலாபத்தை இரட்டிப்பாக்க வங்கி இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வங்கியின் சொத்தானது 476 பில்லியன் ரூபாயாகக் காணப்படுகிறது.வங்கிக்கு,கடன்கள் வழங்கியதன் மூலம் கிடைத்த தேறிய வட்டியானது 5 பில்லியன் ரூபாய் அதிகரித்து 23.9 பில்லியன் ரூபாயாக 26 வீதம் உயர்வடைந்துள்ளது எனவும் பத்திரன மேலும் தெரிவித்தார்.




## கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் மூலதனம் ஆயிரத்து 258 பில்லியனானது



கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது கடந்தவார ஆரம்பத்தில் 88.4 புள்ளிகள் (2.3%) உயர்ந்து 3 ஆயிரத்து 870.3 என்ற உயர்ந்த பட்சப் புள்ளியைத் தொட்டது. இதேவேளை மிலங்கா விலைச் சுட்டியும் 4ஆயிரத்து 441.1 என்ற உயர்புள்ளியைத் தொட்டது.

இந்நிலையில் சந்தையின் மொத்த மூலதனம் (மொத்த பெறுமதி ஆயிரத்து 258.9 பில்லியன் ரூபாயாகக் கணிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் வங்கிகள்,ஹோட்டல்துறை மற்றும் பெருந்தோட்டத் துறை நிறுவனப் பங்குகள் உயர்வடைந்தன. இந்நிலையில சந்தையில்,ஜோன் கீல்ஸ் ஹோட்டல்ஸ், எச்.என்.பி,கொமர்ஷல் வங்கி,செலான் வங்கி ,என்.டி.பி.போன்ற நிறுவனப் பங்குகள் அதிகளவில் வியாபாரமாகியதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 3939.62 | 30.01 |
| மிலங்கா விலைச்சுட்டி | 4524.99 | 27.75 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 1149.57 | |

*உயர்வடைந்த பங்குகள்* : சிலோன் ரீ சேர்விஸஸ் ,ஏசியன் ஹோட்டல்ஸ் ,சன்சைன் ஹோல்டிங் ,கார்ஷன்ஸ்,கொமர்ஷல் வங்கி.
*சரிவைக் காட்டிய பங்குகள்* : என்வெயர்மென்டல் றிசோசஸ் , சிறிலங்கா ரெலிகொம் ,ஜனசக்தி இன்சுரன்ஸ் ,டிமோ ,சிலோன் தியேட்டர்ஸ்.

## இலங்கை வங்கியின் இலாபம் ரூ.3.1 பில்லியன்

Bank of Ceylon
BOC

(கொழும்பு)

இலங்கை வங்கியின் வரிக்குப் பிந்திய இலாபம் 3.3 பில்லியன் ரூபாய் எனவும்,இது கடந்த ஆண்டு 3.9 பில்லியன் ரூபாயாக இருந்தது எனவும் வங்கியின் செய்திக் குறிப்பொன்று தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்திற்கு குறிப்பாக ,ஆடைக் கைத்தொழில், கப்பல்கட்டும் துறை,விவசாயம் மற்றும் உட்கட்டுமானத் துறைகள் போன்ற நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் துறைகளை வங்கி இனங்கண்டு ஆதரவு வழங்கியுள்ளது.

வங்கியில் வாடிக்கையாளர்கள் வைப்புச் செய்த தொகை 29.3 சதவீதம் அதிகரித்து 408.6 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது. இதில் உள்நாட்டு வைப்பாக 281பில்லியன் ரூபாயும்,வெளிநாட்டு நாணய வைப்பாக 126.8 பில்லியன் ரூபாயாகவும் காணப்பட்டது.

## கச்சா எண்ணெய் விலை 86 டொலராக அதிகரிப்பு



கடந்த சில மாதங்களாக சர்வதேச சந்தைகளில் ,கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.கடந்த வார ஆரம்பத்தில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 86 டொலராக அதிகரித்திருந்தது. நியூயோர்க் எண்ணெய்ச் சந்தையில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 84 செண்ட் அதிகரித்து 85.71டொலராக இருந்தது. இதேபோல் அமெரிக்க மற்றும் லண்டன் சந்தைகளிலும் கச்சா எண்ணெய் விலை அதிகரித்து வருகிறது.

## ஐ.பி.எல்.கிரிக்கெட்டில் 10 விநாடி விளம்பரத்துக்கு ரூ.30 இலட்சம்

(மும்பை)

இந்தியன் பிரிமியர் லீக்(ஐ.பி.எல்.)நடத்தும் கிரிக்கெட் போட்டிகளை செட் மாக்ஸ் நிறுவனம் தொலைக் காட்சியில் ஒளிபரப்பி வருகிறது. இந் நிறுவனம் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளின்போது விளம்பரம் செய்ய விரும்பும் நிறுவனங்களுக்கு புதிய கட்டண விகிதத்தை நிர்ணயம் செய்துள்ளது.இதன்படி விளம்பரதாரர்கள் 10 செக்கன்களுக்கு 30 இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டும்.இது குறித்து எஸ் மாக்ஸ் நிறுவனத்தின் விற்பனைப் பிரிவுத் தலைவர் ரோஹித் குப்தா கூறுகையில், தொலைக் காட்சியில் இப் போட்டிகளைக் காண்போரின் எண்ணிக்கை தற்போது 30 சதவீதம் அதிகரித்து 15 கோடியை எட்டியுள்ளதாகத் தெரிகிறது. எமது நிறுவனம் ஐ.பி.எல். போட்டிகளை2017 வரை அதிகாரபூர்வமாக ஒளி பரப்புச் செய்யும் உரிமையை 8200 கோடி ரூபாய்க்கு வாங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

MAX

கு.முருகதாஸ்

நீ எதை விழுங்க முடியும், உன்னை எது– விழுங்க முடியும் என்பதை நீ பார்க்க வேண்டும். –இந்தியா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வாக்களிக்காத 82 வீதமான மக்களின் மனநிலையை அறிய வேண்டும்

தேர்தலுக்கு முன்னர் தேர்தலில் யார் வெற்றி பெறுவர் என்ற ஆராய்வுகள், தேர்தல் முடிந்த பின்னர் வெற்றி, தோல்வி பற்றிய விமர்சனங்கள் இந்த ஒழுங்கமைப்பை ஊடகங்கள் ஒரு போதும் மீறியதில்லை.

அவ்வகையில் யாழ். மாவட்டத் தேர்தல் தொடர்பில் விமர்சனங்களும் வியாக்கியானங்களும் செய்வதாயின் மிகத் தாராளமாகச் செய்யலாம்.

ஆனால் அதுவெல்லாம் எங்கள் இனத்திற்கு எந்தப் பயனையும் தராது என்பதால் அவற்றை அப்படியே விட்டு விடலாம்.

ஆனால் வாக்களித்தவர்களின் எண்ணிக்கை தொடர்பில் சரியான விமர்சனங்கள் இல்லையாயின், அது எங்கள் இனத்தின் எதிர்கால ஆரோக்கியத்திற்குப் பாதகமாக அமையும்.

எனவே அதுபற்றிச் சிந்திப்பது எங்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். ஏனெனில் இலங்கையில் நடைமுறையில் உள்ள தேர்தல் முறையானது பத்துப் பேர் வாக்களித்தாலும் போதும் முழு ஆசனங்களையும் யார் யாருக்கென்று தீர்மானித்து விட முடியும்.

அதேநேரம் பத்துப் பேரின் வாக்களிப்பில் தெரிவாகும் பிரதிநிதித்துவம் ஒட்டுமொத்தத்தில் சரியானதா? என்று எவரும் கேள்வி எழுப்புவதில்லை.

வாக்களித்தவர்களின் எண்ணிக்கைப்படி ஆசனங்களைப் பிரித்தல் என்ற ஜனநாயகப் பண்பில் அது நியாயப்படுத்தப்பட்டாலும் தேர்தலில் 82 வீதமான மக்கள் பங்கேற்கவில்லை என்பது விவாதத்திற்குரிய பெரிய விடயமாகும்.

யாழ்.மாவட்டத்தில் பதினெட்டு வீதமான மக்களின் வாக்களிப்பில் நிறைவு காணும் நாம் 82 வீதமான மக்கள் வாக்களிக்காமல் ஒதுங்கிக் கொண்டது எதற்காக?


அவர்கள் தேர்தலில் போட்டியிட்ட எவரையும் ஏற்றுக் கொள்ளவில்லையா? அல்லது கடந்த காலங்களில் தேர்தலில் போட்டியிட்டவர்கள் தங்களை ஏமாற்றி விட்டதாக மக்கள் கருதுகின்றனரா? இது பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படா விட்டால் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவி மதிப்புக்குரிய பதவி என்பதிலிருந்து விலகிக் கொள்ளும்.

அதேநேரம் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் மக்கள் ஒரு விலகல் நிலைக்கு உட்படுவர்.

எனவே வெற்றி பெற்ற கட்சிகள் ஜனநாயக அரசியலைப் புறக்கணிக்கும் 82 வீதமான மக்களை அணுக வேண்டும். அவர்களின் கருத்துக்களைக் கேட்க வேண்டும். தேர்தல் பிரசாரத்தின் போது ஊண், உறக்கம் மறந்து செயற்பட்டது போல இது விடயத்திலும் செயற்படுவது காலத்தின் கட்டாய தேவை.

# சூழ்ச்சிக்குப் பலியாக மாட்டோம்; தமிழ்மக்கள் நிரூபித்துவிட்டனர்

## பொ.ஐங்கரநேசன் தெரிவிப்பு



நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிக்க அரசு தன்னாலான அத்தனை சூழ்ச்சிகளையும் மேற்கொண்டது. ஆனால் தமிழ்த் தேசியத்தின் பலத்தைச் சிதைக்கும் எத்தகைய சூழ்ச்சிக்கும் பலியாக மாட்டோம் என்று தமிழ் மக்கள் நிரூபித்து விட்டார்கள். இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட பொ.ஐங்கரநேசன் வெளியிட்ட செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், தமிழ் மக்கள் தங்கள் அரசியல் அபிலாசைகளை ஜனநாயக முறையில் வென்றெடுப்பதற்கான அமைப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே நம்புகின்றனர்.

இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அழித்து விடும் நோக்கில் அரசு கங்கணம் கட்டி செயற்பட்டு வருகிறது. கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே கருத்து முரண்பாடுகளை உருவாக்குவது, அவர்களில் சிலரைத் தம்வசப்படுத்துவது என்று கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்ட அரசு நாடாளுமன்றத் தேர்தலில் வேறுவகையான சூழ்ச்சி வலையைப் பின்னியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைக்கும் வாக்குகளைச் சிதறடிக்கும் நோக்கில் மிகப்பெரும் தொகையான சுயேட்சை வேட்பாளர்களையும், உதிரிக் கட்சிகளையும் களமிறக்கியது. இவர்களுக்காக பலகோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்தது. எனினும் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியபலத்தைச் சிதைக்கும் அரசின் எத்தகைய சூழ்ச்சிக்கும் பலியாகமாட்டோம் என்பதைத் தெளிவாக நிரூபித்துவிட்டனர்.

வடகிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே அதிகப்படியான வாக்குகளை வழங்கித் தங்கள் அரசியல் தலைமைத்துவம் இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பே என்பதையும் தமிழ் மக்கள் தெளிவு படுத்தியுள்ளனர். அதேசமயம் யாழ். மாவட்டத்தில் வாக்களிப்பு மிகக்குறைவாக இடம்பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. குடாநாட்டு மக்கள் வாக்களிப்பில் ஆர்வம் காட்டாமைக்கான காரணங்கள் விரிவாக ஆராயப்பட வேண்டியவை. வாக்களிப்பு சதவீதம் குறைவாக இருந்தமையால், விகிதாசார தேர்தல் முறை காரணமாக யாழ். மாவட்டத் தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்து வேட் பாளர்கள் மட்டுமே நாடாளுமன்றத்துக்கு தெரிவாக முடிந்தது .

இவர்களில் ஒருவராக நான் இடம்பெறாதபோதும், தமிழ் மக்கள் தங்கள் அரசியல் இலக்கை எட்டுவதற்கும். தமிழ் மக்களுடைய இயற்கை மற்றும் பண்பாட்டு மரபுகளைப் பாதுகாப்பதற்கும் தொடர்ச்சியாக உழைப்பேன் என்று உறுதி கூறுகின்றேன் என்று தெரிவித்துள்ளார் . (ந-5)

# தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி தனது நோக்கில் வெற்றி பெற்றுள்ளது

## பொருளியலாளர் வரதராஜன் தெரிவிப்பு



தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி தேர்தலில் தோல்வியுற்றாலும், தனது நோக்கில் வெற்றி பெற்றிருப்பதாக, யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் சி.வரதராஜன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்; இத் தேர்தலில் போட்டியிட்ட எனக்கு தாங்கள் வழங்கிய பெரும் ஆதரவிற்கு மிகவும் நன்றி.

இத் தேர்தலில் நாம் தோல்வியடைந்த போதிலும் போட்டியிட்டதற்கான நோக்கத்தில் நாம் வெற்றியடைந்துள்ளோம். கூட்டமைப்பு தூக்கியெறிய நினைத்த தமிழ்த் தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமைபோன்றவற்றை மீண்டும் அவர்கள் தூக்கிப் பிடிப்பதற்கு நாம் துணைநின்றிருக்கின்றோம் என்பதில் நாம் பெருமை அடைகின்றோம்.

இத் தேர்தலில் நாம் எந்தவொரு ஆசனத்தையும் பெறா விட்டாலும் கூட்டமைப்புதவறான பாதையில் செல்லும் போது நிலத்திலும் புலத்திலும் உள்ள எம் மக்களின் துணையோடு அவர்களை சரியான பாதையில் நடக்கச் செய்வதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

வில்லின் நாண் பின்னோக்கிச் செல்வது அம்பை முன்னோக்கிச் செலுத்துவதற்கே. எனவே இத் தேர்தல் எமக்குப் பின்னடைவல்ல. நாம் முன்னோக்கிப் பாய்வதற்கான ஒரு பயிற்சிக் களமே இத் தேர்தலாகும். நாம் வெற்றியைத் தலைக்குள் ஏற்றமாட்டோம். தோல்வியை மனதிற்குள் புகவிடவும் மாட்டோம்.

நான் இத் தேர்தலில் போட்டியிடும்போது உங்களைப் போன்றவர்களின் இவ்வாறான பெரும் ஆதரவு எனக்குக் கிடைக்கும் என சிறிதும் எதிர்பார்க்கவில்லை. தேர்தல் வேலைகளில் நான் சற்று சோர்வடையும் போது உங்களது ஆதரவான ஆறுதலான வார்த்தைகள் எழுத்துக்கள் பெரிதும் உற்சாகத்தைத் தந்தன. உங்களுக்கு ஒரு வெற்றிச் செய்தியை வழங்க முடியாமல் போய்விட்டதே என்பது மட்டும்தான் எனது கவலை. எதிர்காலத்தில் எம் மக்களின் அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளுக்கான திட்டங்களை மேற்கொள்வதில் தங்களின் ஆலோசனைகளையும் உதவிகளையும் நாடி நிற்கின்றேன். எழுவோம்; தேசியத்திற்காக அயராது உழைப்போம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# அதிசயங்களும் அற்புதங்களும் நம்பிக்கையின் வெளிப்பாடு

## பரமபிதா காட்டிய பாதை

நேராகத் தேன்றினாலும் அம்பு கொடியது; வளைவுடன் தோன்றினாலும் யாழின் கொம்பு நன்மையானது; மக்களின் பண்புகளையும் செயல்வகையால் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆம், உலகில் உள்ள பொருட்களையும் அவற்றின் தன்மைகளையும் மூன்று வகையில் அறிந்து கொள்ளலாம்.

1.அறிவியல் வழி

2.அடையாளங்கள் வழி

3.அனுபவங்கள் வழி

இங்கு அறிவியல் வழி என்று குறிப்பிடும் போது ஒரு பொருளைப் பற்றி அறிஞர்கள் எழுதிய புத்தகத்தைப் படித்தோ அல்லது ஆய்வு செய்து பார்த்தோ அறிந்து கொள்ளலாம் உ+ம் : ஐசாக் நியூட்டன் கண்டுபிடித்த புவிஈர்ப்பு விசையைப் பற்றி புத்தகங்கள் வழியாக அறிந்து தெரிந்து கொள்ளலாம்.

அடையாளங்கள் வழி என்னும்போது ஒரு பொருளை இயற்கை அடையாளங்கள், செயற்கை அடையாளங்கள் வழி எளிதாகப் புரிந்து, அறிந்து கொள்ளுதல். உ+ம் : வானத்திலே தோன்றும் மின்னல், இடி, மழை வருவதின் அடையாளம். இது இயற்கையானது.

அடுத்து அனுபவங்கள் வழி என்னும் போது ஒரு பொருளை வாழ்வில் பெறுகின்ற அன்றாட அனுபவங்கள் வழி புரிந்து அறிந்து கொள்வது உ+ம் : நெருப்பு சுடுகின்றது என்றால் ஏற்கனவே ஒருவன் சூடுபட்டிருக்க வேண்டும். இது மிகவும் எளிதான வழி. ஆம், இன்று பாஸ்கோ காலத்தின் 2ஆம் ஞாயிறைக் கொண்டாடுகிறோம். இது உயிர்ப் பின் 2ஆம் ஞாயிறாகவும் இருக்கிறது.

இயேசுவின் உயிர்ப்பு இன்று நமக்கு எதைச் சுட்டுகிறது என்று அறிய வேண்டும்.



இன்றைய மூன்று வாசகங்களுமே உயிர்த்த ஆண்டவரின் வழியாக செய்யப்படுகின்ற அல் லது நிகழ்கின்ற அற்புதங்களும் அடையாளங்களும் பற்றித்தான் அதிகமாகவும் , ஆழமாகவும் எடுத்துரைக்கின் றன.

ஆம், இறைவனை அதிலும் குறிப்பாக உயிர்த்த ஆண்ட வரையும், அவரின் வல்ல செயல்களையும் , அரும் அடையா ளங்களையும் அறிந்தும் , புரிந்தும் கொள்ள வேண்டும் என்றால் ஐயம் அற்ற நம்பிக்கையும், ஆழ்ந்த இறை அனுபவமும் தேவை. நம்பிக்கை என்பது திறந்த ஜன்னலைப் போன் றது. தன் வழி யாகத்தான் சூரிய ஒளி உள்ளே வந்து உள்ளி ருக்கின்ற இருளைப் போக்கி வெளிச்சத்தைக் கொடுக்கின்றது என்று அறிஞன் கூறுகிறான்.

எனவே, நாமும் நம்முடைய வாழ்வில் நம்பிக்கை என்ற ஜன்னலைத் திறப்போம். அதன் வழி உயிர்த்த ஆண்டவரின் ஒளி யைப் பாய்ச்சச் செய்வோம். அப்போது வாழ்வில் அற்புதங்களும் அரும் அடையாளங்களும் நடை பெறும்

ஆம் நீயும் உயிர்த்த ஆண்டவரைச் சந்திக்க வேண்டுமா? அவரின் அற்புதங்களையும் அதிசயங்களையும் காணவேண்டுமா? ஒரே வழி அது நம்பிக்கை வழி ஆண்டவரை நம்புவோம், அரும் செயல்களைக் காண்போம்.

ஜோன் ரொபேர்ட்

## யாருக்கும் அடிபணியாத பலமான பாராளுமன்றமொன்றை மக்கள் எமக்கு பெற்றுக் கொடுத்துள்ளனர்–லக்ஷ்மன் யாப்பா



(கொழும்பு)

யாருக்கும் அடிபணியாத பலமான பாராளுமன்றம் ஒன்றை நாட்டு மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு வழங்கியுள்ளனர்.

அந்த வகையில் எமக்கு வாக்களித்த நாட்டு மக்களுக்கு எமது நன்றிகளை தெரிவிக்கின்றோம் என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டியுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் குறித்து லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நாட்டு மக்கள் மிகவும் பலமான பாராளுமன்றம் ஒன்றை வழங்கியுள்ளனர்.

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் ஊடாக நாட்டை துரித கதியில் அபிவிருத்தி செய்வதற்கு பலமான பாராளுமன்றத்தையே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாட்டு மக்களிடம் கோரியது.

அந்த வகையில் இலங்கையை ஆசியாவில் ஆச்சரியமிக்க நாடாக மாற்றுவதற்காக நாட்டு மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளனர்.

யாருக்கும் அடிபணியாத மிகவும் நிலையான பாராளுமன்றத்தை மக்கள் எமக்கு பெற்றுக் கொடுத்துள்ளனர்.

மேலும் தற்போது நடைமுறையில் இருக்கின்ற அரசியலமைப்பில் பல்வேறு விதமான மாற்றங்களை செய்வதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அதன்படி எதிர்காலத்தில் அரசியலமைப்பில் மாற்றங்களை கொண்டு வருவதற்கு எதிர்த் தரப்பில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் எங்களுக்கு ஆதரவு வழங்குவார்கள் என்று நம்புகின்றோம்.

எமது கோரிக்கையை ஏற்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு வாக்களித்த அனைத்து மக்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றார். (6)

## ஐ.தே.க. தலைமைத்துவத்திலிருந்து விலகப் போவதில்லை - ரணில்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து தாம் பதவி விலகப் போவதில்லை என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று காலை இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் தோல்வி என்பது தேர்தல் தொகுதி அமைப்பு முறையில் உள்ள குறைபாடு ஒன்றே தவிர அவரது தலைமைத்துவத்தில் உள்ள நம்பிக்கை குறைவு அல்ல என்றும் அவர் தெரிவித்தார். மாத்தறை மாவட்டத்தில் ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் தெரிவாகியிருக்கும் மங்கள சமரவீரவும் இங்கு உரையாற்றினார். (6)

## வன்முறைக் கலாசாரத்தை பின்னணியாகக் கொண்ட சர்வாதிகார ஆளுமைக்குள் இலங்கை–ரில்வின்சில்வா

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல் முடிபுகள் ஜனநாயகத்திற்கும் மக்கள் ஆணைக்கும் பெரும் அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளன.

சட்ட ஒழுங்குகள் அற்ற வன்முறைக் கலாசாரத்தை பின்னணியாகக் கொண்ட சர்வாதிகார ஆளுமைக்குள் இலங்கை உள்வாங்கப்பட்டுள்ளது என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பொது மக்களுக்கு தேர்தல்கள் மீது நம்பிக்கை வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மோசடிகளும் வன்முறைகளும் இலங்கை தேர்தல்களில் முக்கியமானவையாக மாறியுள்ளன.

நாட்டின் எதிர்காலம் கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் முடிபுகள் மற்றும் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக தெளிவுபடுத்துகையிலேயே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

அண்மைய காலங்களில் இலங்கையில் பல்வேறு தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன. அவை அனைத்திலும் தற்போதைய அரசாங்கத்தின் தேர்தல் சட்ட மீறல்களும் எதிர்கட்சிகள் மீதான தாக்குதல்களும் மேலோங்கியே காணப்பட்டன.

குறிப்பாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மிக் மோசமான முறையில் தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டமை தெரிந்ததே.

இவ்வாறான செயற்பாடுகளினால் பொது மக்கள் சுயாதீனமானதும் நேர்மையானதுமான தேர்தல் ஒன்றை எதிர்பார்க்க முடியாமலும் தேர்தல்கள் மீது நம்பிக்கை வைக்க முடியாத நிலைமையிலுமே உள்ளனர்.

இதனாலேயே இறுதியாக நடைபெற்று முடிந்த இலங்கையின் ஏழாவது பாராளுமன்றத் தேர்தலில் பொது மக்களின் வாக்களிப்பு வீதம் குறைய பிரதான காரணமாக அமைந்தது.

தேர்தல் வன்முறைகள் மற்றும் மோசடிகளினால் பொதுமக்களுக்கு தேர்தல்களே வெறுத்துப் போயுள்ளது.

கண்டி மாவட்ட நாவலப்பிட்டிய தேர்தல் தொகுதியில் வாக்களிப்பு நிலையங்களுக்குள் அமைச்சர் ஒருவரும் அவரது குண்டர்




களும் உட்புகுந்து தேர்தல் பிரதிநிதிகளை விரட்டியடித்து விட்டு வாக்கு மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர். இதனால் நாவலப்பிட்டிய தேர்தல் தொகுதியில் மீள் வாக்களிப்பு நடைபெறும் நிலை உருவாகியுள்ளது.

ஜனநாயக தேசியக் கூட்டணியின் தலைவரும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளருமான ஜெனரல் சரத் பொன்சேகா சிறை வைக்கப்பட்டுள்ளார். தேர்தல்களில் எதிர்க் கட்சிகளை செயற்படவிடாது கட்சி உறுப்பினர்களை சிறை வைத்து ஆட்சியைக் கைப்பற்றும் போக்கே தற்போதைய அரசிடம் உண்டு.

எனவே இறுதியாக நடைபெற்ற இலங்கையின் ஏழாவது பாராளுமன்றத் தேர்தலில் பொது மக்களின் விருப்புகள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளன எனக் கூறினார். (6)

## மஹிந்த சிந்தனையை மக்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளனர் - ஜனாதிபதி



(கொழும்பு)

மஹிந்த சிந்தனையை நாட்டு மக்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு மா்பெரும் வெற்றியை ஈட்டிக் கொடுத்த மக்களுக்கு நன்றி பாராட்டும் முகமாக ஜனாதிபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாய்நாட்டுக்கு எதிரான ச்கல சவால்களையும் வென்றெடுக்கக் வலுவான ஓர் பாராளுமன்றத்தை வழங்குமாறு மக்களிடம் கோரியதாகவும் அந்த ஆணையை மக்கள் தமக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தல் வெற்றி ஓர் வரலாற்று சிறப்பு வாய்ந்த வெற்றியாக கருதப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தென் ஆசியாவின் அதிசயமாக இலங்கையை மாற்றியமைப்பதற்கான முதல் படிக்கல்லாக இந்த வெற்றி அமையும் என தெரிவித்த அவர் நாட்டு மக்களின் நலனை முதன்மைப்படுத்திய தமது இலக்கினை எட்டுவதற்கு மக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் பேதங்களை களைந்து அணிதிரளுமாறு அவர்கோரியுள்ளார். (6)

### தமிழர்களின் பிரச்சினைக்கு

## அரசாங்கம் காத்திரமான தீர்வுத்திட்டமொன்றை வழங்க வேண்டும் - ரொபர்ட் ஓ பிளெக்

(கொழும்பு)

தமிழர்களின் பிரச்சினைக்கு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை வழங்க வேண்டுமென அமெரிக்கப் பிரதி ராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

எதிர்காலம் குறித்த பிரகாசமான சிந்தனைகளுடன் தமிழ் மக்கள் வாழக்கூடிய ஓர் பின்னணி உருவாக்கப்பட வேண்டியது அவசியமானதென குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் குற்றச் செயல்கள் தண்டனை வழங்குதல் போன்ற நடவடிக்கை எடுத்தல் போன்றவை குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியின் போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துவதன் மூலம் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ள முடியும் என தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்திற்கு அமைவான முறையில் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு எதிரான விசாரணைகள் நடைபெறும் என அமெரிக்கா எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

### விமான விபத்தில்

## போலந்து ஜனாதிபதி உட்பட 132 பேர் பலி;

(மொஸ்கோ)

போலந்து ஜனாதிபதி லெக் காக்ஸிநிஸ்கி நேற்றுக் காலை விமான விபத்தில் உயிரிழந்தார்.

அவரது மனைவி, முக்கிய அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள் மற்றும் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு இயக்கங்களைச் சேர்ந்த தலைவர்கள் உட்பட சுமார் 132 பேர் விமான விபத்தில் உயிரிழந்தனர்.

மேலும் நாடு கடத்தப்பட்ட முன்னாள் அதிபர் ரிஸ்ஸர்ட் க்கப்ஸராஸ்கி நாடாளுமன்றத் துணைத்தலைவர் ஜெர்ஸி ஸ்மஜ்ஸின்ஸ்கி அதிபர் அலுவலகத்தின் தலைமை அதிகாரி லாடிஸ்லா ஸ்டாசியக் உள்ளிட்டோரும் உயிரிழந்தனர்.

ரஷ்யாவில் உள்ள ஸ்மோலென்ஸ்க் விமான நிலையத்தில் தரையிறங்க முயன்ற போதே இத்துயரச் சம்பவம் நிகழ்ந்தது.

விமான நிலையம் அருகேயுள்ள மரங்களில் அந்த விமானத்தின் இறக்கைப் பகுதிகள் மோதியதால் விமானம் தீப்பிடித்து எரிந்ததாக தகவல்கள் கூறுகின்றன.



இரண்டாம் உலகப் போரின்போது 22 ஆயிரம் போலந்துஇராணுவ அதிகாரிகளை சோவியத் படைகள் படுகொலை செய்ததன் 70 ஆவது நினைவு தின நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக போலந்து அதிபரும் முக்கிய பிரமுகர்களும் வந்த போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

போலந்து அதிபர் உட்பட அந்த விமானத்தில் பயணம் செய்த அத்தனை பேரும் உயிரிழந்ததை ஸ்மோலென்ஸ்க் நகர மேயர் உறுதிப்படுத்தியுள்ளார். மேலும் போலந்து நாட்டின் டிவிஎன் 24 செய்தித் தொலைக்காட்சியும் இத்தகவலை வெளியிட்டுள்ளது. (6)


# ஒரு நாள் கிரிக்கெட் போட்டி
# எட்வெட் எடினின் அதிரடியில் யாழ். மத்திய கல்லூரி வெற்றி




(யாழ்ப்பாணம்)

எட்வெட் எடினின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி 155 ஓட்டங்கள் வித்தியாசத்தில் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை வெற்றிகொண்டது.

யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்குமிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டி நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.





இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி எட்வெட் எடினின் அதிரடியில் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 259 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் எட்வெட் எடின் 80 பந்துகளில் (13 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 95 ஓட்டங்களையும் வதுஷனன் 46 பந்துகளில் (7 பவுண்டரிகள் அடங்கலாக) 36 ஓட்டங்களையும் கவிகரன் 42 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 30 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஜேம்ஸ் ஜான்ஸன் 23, கோகுலன் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹரிவதனன் 10 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 50 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் அமிர்தயன், விதுஷன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஜெரூஷன், பிரியதர்ஷன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முன்னணித் வீரர்கள் சோபிக்காத நிலையில் 32.1 ஓவர்களில் 104 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 155 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் பிரணவன் 19, ஆதிரையன் 15, கஜீபன் 13 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் ஜெரிக் துஷான், கோகுலன், தனுஜன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஜெனோஷன், திவாகர், ரதீஸன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் 8ஆவது முறையாக நடைபெறும் இவ்விரு பாடசாலை அணிகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணி தொடர்ச்சியாக நான்காவது முறை வெற்றி பெற்றுள்ளது.

இதேபோன்று யாழ்.சென்ஜோன்ஸ் அணி முதல் நான்குமுறை நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியின் வெற்றிக்கு வழியமைத்த எட்வெட் எடின் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

இதேவேளை கடந்த பெப்ரவரிமாதம் நடைபெற்ற இரு கல்லூரி அணிகளுக்கிடையிலான வடக்கின் பெரும் போரில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சென்னை அணி தோல்வி; டெக்கான் சார்ஜர்ஸ் சாதித்தது

(நாக்பூர்)

சகல துறையிலும் பிரகாசித்த டெக்கான் சார்ஜர்ஸ் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் சென்னை சுப்பர்கிங்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் லீக் சுற்றின் 42ஆவது போட்டி நேற்று நாக்பூரில் நடைபெற்றது.

இப் போட்டியில் தோனிதலைமையிலான சென்னை சுப்பர்கிங்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 138 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் சுரேஸ் ரெய்னா 42 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள் அடங்கலாக) 52 ஓட்டங்களையும் முரளி விஜய் 13 பந்துகளில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸ்சர் அடங்கலாக) 23 ஓட்டங்களையும் மத்யூ ஹைடன் 18 பந்துகளில் (3 பவுண்டரி அடங்கலாக) 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

அணித்தலைவர் தோனி, மைக்கெல் ஹசி, பத்ரிநாத் ஆகியோர் இரட்டை இலக்கு ஓட்டங்களைக் கூட எடுக்காமல் ஆட்டமிழந்து சொதப்பினர்.

பந்துவீச்சில் ரியான் ஹரிஸ் 4 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களையும் ஆர்.பி.சிங், ஹார்மிற் சிங், அன்ரூ சைமண்ட்ஸ், பிரஜன் ஓஜா ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி சுமனின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 19.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 139 ஓட்டங்களை எடுத்து 6 விக் கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் ரி.சுமன் 44 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 55 ஓட்டங்களையும் அன்ரூ சைமண்ட்ஸ் ஆட்டமிழக்காமல் 22 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 27 ஓட்டங்களையும் மிஷ்ரா 18 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 21 ஓட்டங்களையும் சிமித் ஆட்டமிழக்காமல் 8 பந்துகளில் (ஒரு சிக்ஸர் அடங்கலாக) 13 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அஸ்வின் 2 விக்கெட்டுக்களையும் ஜகதி, ரெய்னா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த ரியான் ஹரிஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 11ஆவது போட்டியில் 5 ஆவது வெற்றியைப் பதிவு செய்து 10 புள்ளிகளைப் பெற்றது எனினும் தொடர்ந்து 7ஆவது இடத்திலுள்ளது.

இதேவேளை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் விளையாடிய 11ஆவது போட்டியில் 6ஆவது தோல்வியைச் சந்தித்தது.

# உத்தப்பா, டிராவிட் பிரகாசம்; பெங்களூர் அணி இலகு வெற்றி

(பெங்களூர்)

உத்தப்பா, டிராவிட்டின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வீழ்த்தியது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று பெங்களூரில் நடைபெற்ற லீக் சுற்றின் 43ஆவது சுற்றுப் போட்டியில் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணித் தலைவர் கும்ளே முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 160 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பிரண்டன் மக்குலம் 36 பந்துகளில் (15 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 45 ஓட்டங்களையும் கிறிஸ் ஹயில் 15 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 34 ஓட்டங்களையும் அணித் தலைவர் கங்குலி 32 பந்துகளில் (2 பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வினேய் குமார் 3 விக்கெட்டுக்களையும் ஜக் கலிஸ் 2 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன், அணித்தலைவர் கும்ளே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி உத்தப்பா, டிராவிட்டின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 17.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 164 ஓட்டங்களைக் குவித்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் றொபின் உத்தப்பா 22 பந்துகளில் (3 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 52 ஓட்டங்களையும் ராகுல் டிராவிட் 35 பந்துகளில் (5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 52 ஓட்டங்களையும் சிறிராம் 27 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் டின்டா 2 விக்கெட்டுக்களையும் மத்யூஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 11ஆவது போட்டியில் 6ஆவது வெற்றியைப்பதிவு செய்து 12 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியது.

இதேவேளை கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி தான் விளையாடிய 11ஆவது போட்டியில் 6ஆவது தோல்வியைச்சந்தித்தது.

மாபெரும் மலிவு விற்பனை; சித்திரை புதுவருடப் பிறப்பை முன்னிட்டு


சாறிகள், சல்வார் துணிகள், ஸ்கேட், பிளவுஸ், சல்வார்கள், சேட், ஜீன்ஸ் மெற்றீரியல்,
றெடிமெட் சூட் வகைகள், சீக்கூன்ஸ் சாறிகள், பட்டு சாறிகள், துணி வகைகள்.
இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்
இல.105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி-030)

பொதுசன நூலகம் நாவாந்துறைப் படிப்பகம் மாநகர சபை, யாழ்ப்பாணம்.

## தமிழ் மக்கள் எல்லோர்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது,

வடக்கு-கிழக்கு மக்களிற்கான அரசியல் தீர்வு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாகவே நாம் அதிகம் கவனம் செலுத்துவோம்.

வடக்கு-கிழக்கு மக்கள் எமக்கு வாக்களித் தது எமது கொள்கைகளை ஏற்றுக் கொண்ட தனால் தான். தமிழ் மக்களின் அரசியல் தீர்வையும் விரைவான மீள்குடியேற்றத்தை யும் நாம் வலியுறுத்துவோம்.

அரசியல் அமைப்பு திட்டம் தொடர்பாக மக்கள் நம்பிக்கை இழந்ததே மிகக்குறைந் தளவு மக்கள் வாக்களிக்க காரணமாகியது. தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கோ அல்லது அரசுக்கோ வாக்களிப்பது ஆக்கபூர்வமான தல்ல என மக்கள் எண்ணுகின்றனர்.

தமிழ் மக்கள் எல்லோர் மீதும் நம்பிக்கை யை இழந்துள்ளனர். அவர்கள் யாரையும் நம்பத் தயாராக இல்லை. நாம் 13 ஆசனங் களை பெற்றுள்ளோம். மேலும் ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தை பெறுவோம்.

தேர்தல் ஆணையகம் சீரான நடவடிக் கைகளை மேற்கொண்டிருந்தால் முல்லைத் தீவு மற்றும் கிளிநொச்சி பகுதிகளிலும் மேலும் சில ஆசனங்களைப் பெற்றிருப்போம். வவுனி யாவிலிருந்து 4 ஆயிரம் இடம் பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்காக கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டபோதும் அங்கு அவர்கள் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்பட வில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**ஜனாதிபதியுடன் பேசத் தயார்**

இதேவேளை தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித் துள்ளது.

பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கீழ் போட்டியிட்ட தாம் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மொத்தமாக 13 ஆசனங்களை வென்றெடுத்துள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் நாடாளு மன்றத்துக்கு வெளியேயும் தமிழர் பிரச்சினைக் காகவும் அரசியல் தீர்வுத் திட்டமொன்றின் அவசியம் குறித்தும் குரல்கொடுக்கப் போவ தாகவும் விரிவாக்கப்பட்ட அதிகாரப் பரவலாக் கத் திட்டமொன்றின் அவசியம் விஞ்சி நிற்ப தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதி பதியுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என வும் அரசியல் தீர்வுத் திட்டம் மற்றும் மீள் குடி யேற்றம் ஆகிய பிரச்சினைகளே பிரதான பிரச் சினைகளாகும் என குறிப்பிட்டுள்ளது. (ந-5)

## திருமலை...

பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கும்புறுப்பிட்டிப் பகுதியில் வாக்காளர் அட்டை கள் களவாடப்பட் டதைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்தின் தேர் தல் முடிபுகளை வெளியிடுவதைத் தேர்தல் திணைக் களம் இடைநிறு த்தி வைத்துள்ளது.

இந் நிலையி லேயே இரு தொகு திகளிலும் மறு வாக்குப் பதிவு எதிர் வரும் 20 ஆம் திகதி நடைபெற வுள்ளதாகத் தேர் தல்கள் திணைக் களம் அறிவித் துள்ளது. (ந-5)

## வண்ணை நாச்சிமார் கோவிலடியில்

# நடைபாதைக் கடைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலுக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த நடைபாதை வியாபாரிகளின் கடைகள் மோட்டார் சைக்கி ளில் சென்ற இனந்தெரியாத நபர்களினால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.



நேற்றிரவு 7.30 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, தென்னிலங்கை வியாபாரிகளி னால் கடந்த வாரம் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியிலுள்ள வண்ணை நாச்சிமார் கோவி லுக்கு முன்பாக ஆலய தேர் மூட்டிக்கு அரு காமையில் கடைகள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்றிரவு அப் பகுதிக்கு 3 மோட்டார் சைக்கிள்களில் வந்து இனந்தெரி யாத நபர்கள் சிலர் வியாபாரப் பொருள்களின் மீது பெற்றோல் ஊற்றி தீப்பந்தங்களை எறிந்து விட்டுச் சென்றுள்ளனர்.

யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் பிரி வினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் விரைந்து தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். (ந-14)

## தேசியப்...

ஏனைய மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த வாக்குகள் 2 இலட்சத்து 12 ஆயிரத்து 590 ஆகும்.

திருகோணமலை மாவட்டத்தில் கிடைத் தது இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக் கப் படாமல் உள்ள சுமார் 32 ஆயிரம் வாக் குகளையும் சேர்த்தால் மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 50 ஆயிரமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இதன் மூலம் ஒரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கிடைக்கக் கூடிய வாய்ப்பு உண்டு. (ந-5)

## மனித...

படுத்துவது தொடர்பில் தெரிவித்திருந்ததற் குத் தற்போது ஆணை கிடைத்துள்ளது.

எனவே அரசு அதனைப் பாதுகாக்க முற் பட வேண்டும். இலங்கை அரசுக்கு வாழ்த்துக் களைத் தெரிவிப்பதுடன் அவர்கள் இன ஒற் றுமை மற்றும் தேசிய நல்லிணக்கப்பாடு ஆகியன தொடர்பில் நடவடிக்கைகளை முன் னெடுக்க வேண்டும் என்பதையும் தெரிவித் துக் கொள்கின்றோம். அரசு பொருளாதார அபிவிருத்திகளையும் அதிகாரங்களையும் பகிர்ந்தளிக்க வேண்டும். புதிய அரசுடன் இணை ந்து செயற்பட நாம் ஆவலாகவுள்ளோம்.

இரு நாடுகளினதும் நீண்ட கால உறவு கள் எதிர்காலத்தில் மேலும் வலுப்படும் என நாம் நம்புகின்றோம் என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-5)

## முக்கிய அமைச்சர்கள்...

நிராகரிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி, ஜே. வி.பி., இடதுசாரி முன் னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த பலரும் இந்தத் தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர்.

ஜே.வி.பிக்குப் பாரிய பின்னடைவை ஏற் படுத்திய இத் தேர்தலில் அக் கட்சிக்கு ஆகக் குறைந்தளவிலான ஆசனங்களே கிடைக்கப் பெற்றுள்ளன.

அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யானைச் சின்னத்தில் போட் டியிட்ட முன்னாள் எம்.பிக்களான மொஹ மட் மஹ்ரூப், சபிக் ரஜாப்டீன், சாகல ரத்நாயக்க, ஜோன் அமரதுங்க உள்ளிட்டோரும் தோல் வியடைந்துள்ளனர்.

ஜே.வி.பியிலிருந்து விலகி தேசிய சுதந்திர முன்னணியில் இணைந்து கொண்டு பின் னர் ஆளும் கட்சியில் இணைந்த முன்னாள் எம்.பி. நந்தன குலதிலக தோல்வியடைந்துள் ளதுடன் ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் சார்பில் கிண்ணம் சின்னத்தில் போட்டியிட்ட ஜே.வி.பியின் முன்னாள் எம்.பிக்கள் பலரும் இத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டுள்னர். (ந-5)


யாழ் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின்
BIT
பயிற்சி நெறி இப்போது...
யாழ் மண்ணில் ESOFT இல் மட்டுமே...
விண்ணப்ப முடிவுத் திகதி 12.04.2010
ESOFT The Leader in Professional ICT Education
114, Navalar Road, Jaffna.
Call @ 021 222 4142
077 309 9 308
(க-4984)

கிறிஸ்ரல் சென்ரர், நெல்லியடி
'O/L DAY Class' பிரிவு-I
ஆரம்பம்:- 15.04.2010 மு.ப. 8.30
- அனுமதியை முன்கூட்டியே பெறவும்
- கணிதம் அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும்
- 20 வருட அனுபவம் உள்ள ஆசிரியர்கள்
2012 A/L
கலை, வர்த்தகம், கணிதப் பிரிவுகள் ஆரம்பம்
(C-025)

A/L-2012
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்
ஏப்ரில்-17
காலை-9 மணி
DMI Jaffna
(சி-027)

காணி விற்பனைக்கு
யாழ். நகருக்கு சுமார் 4Km தூரத்தில் நல்லூர் கோவிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு 3ஆம் கட்டை வீதியில் பாதுகாப்பு மிக்க அமைதியான சூழலில் தூய்மையான குடிதண்ணீர் உள்ள இரண்டு வீடுகள் கட்டக்கூடிய சுமார் 4 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விரும்பினால் இரண்டாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
உடன் தொடர்புகளுக்கு:-
077 2469015, 072 5682849, 078 6711952
(1125)

வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி
தமிழ் மக்களது ஜனநாயக அரசியலில் சுயநிர்ணய உரிமைக்கான, தமிழ் தேசியத்திற்கான அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பதை நிரூபித்துள்ளதுடன், பல அச்சுறுத்தல்கள், இன்னல்கள் மத்தியிலும் வாக்களித்து பெரும்பான்மை வாக்குக ளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மூன்றாவதாக என்னை வெற்றி பெற வைத்து உங்களுக்காக மேலும் பல சேவைகளாற்றுவதற்காக மீண்டும் என்னைப் பாராளுமன் றம் அனுப்பி வைக்கும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை இருகரம் கூப்பித் தெரிவித்துக் கொள்கின்றேன்!
அப்பாத்துரை விநாயகமூர்த்தி LL.B சிரேஷ்ட சட்டத்தரணி,
தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.
(சி-028)





புதுக்கடைத் திறப்பு விழா
இன்று (11.04.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9.25 மணிமுதல் 11 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்
பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணத்தில் தனது இரண்டாவது கிளை ஸ்தாபனத்தை மங்கலகரமாக திறந்து வைக்கவுள்ளது.
இடம்: 212, முதலாம் குறுக்குத்தெரு (வேம்படிச் சந்தி), யாழ்ப்பாணம்.
திறந்து வைப்பவர்: திருமதி மதுமதி வசந்தகுமார்-பிராந்திய உள்ளூராட்சி, உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.
எமது அன்புக்குரிய வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை, இல.04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 6693
(சி-026)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.